Registered No. M-4483 Madras War Review (TAMIL) 21-4-1944

# யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் வருஷம் ஏப்ரல் மீ 21வ, வெள்ளிக்கிழமை இதழ் 33

## இலங்கை-எதிர்த் தாக்குதல் தளம்

தென் கிழக்காசியப் படையின் தலைமைக் காரியாலயம் இலங்கைக்கு மாற்றப்பட்டு விட்டது. ஜப்பானியப் படைகளை முழு மூச்சாக எதிர்த்துத் தாக்குவதற்குச் செய்யப்படும் ஏற்பாடுகளின் அடுத்த கட்டம் இது, என்று தெரிகிறது. இந்தச் செய்தி நம் அனைவருக்கும் ஊக்கமும், உற்சாகமும் அளிக்க வேண்டும். என்றாலும், நாம் அவசரப் படாமலும் அளவு கடந்த நம்பிக்கை கொள்ளாமலும் எச்சரிக்கையோடிருக்க வேண்டும்.

நாளடைவில், மீண்டும் கைப்பற்றிய நாடுகளுக்குள் தன் தலைமைக் காரியாலயத்தை மகா படைத் தலைவர் மாற்றக் கூடு மென்று எதிர்பார்க்கலாம். அவர் இங்கிருக்கும் போது, இதற்கு முன்னதாகவும் இந்தக் கட்டத்திலும் ஒரு போது மில்லாத அளவிற்கு, உலக மக்கள் அனைவருடைய கவனமும் இலங்கை மீது பதிகிறது. இந்தக் கட்டமே இப்போது தான் ஆரம்பமாகிறது. இலங்கையின் பூரண முயற்சி தேவைப்படும்.

இரண்டு வருஷங்களுக்குச் சற்று முன்பு கொழும்புவையும் திரிகோண மலையையும் ஜப்பானியர்கள் தாக்கினார்கள். இதை நாம் மறக்க வில்லை. ஜப்பானியர் அக்கிரமத்தை முதன் முதலாக ஒடுக்கிய இலங்கை, இப்போது நேச நாடுகளின் எதிர்த் தாக்குதல் தளமாக அமைவது பொருத்தந் தான். மிகவும் மகிழத் தக்கதுங் கூட.

ஐரோப்பிய யுத்தத்தை விட, கீழ் நாடுகளில் நடை பெறும் யுத்தம், அதிகக் காலம் நடைபெறும். நாம் நெடுங்காலக் கடும் உழைப்பிற்கு ஆயத்தமா யிருக்க வேண்டும். அச்சமயத்தில் இன்றியமையாத முயற்சிகளை மேற் கொள்ளுவதுங் கூடக் கஷ்டமானவையா யிருக்கும். பிறகு தான் எதிரி தாக்குதல் ஆபத்து நீங்கும்; யுத்தக் களைப்பும் அதிகரிக்கும். கடைசியாக இலங்கையின் யுத்த முயற்சி, எந்த அளவிற்குக் கஷ்டங்களைச் சகிக்கக் கூடும் என்பதற்கு ஒரு சோதனையா யமையும்.

அட்மிரல் சர் ஜெப்ரே லேட்டன், இலங்கைப் பிரதம படைத் தலைவர் பத்திரிகைக்காரர்களுக்குப் பேட்டியளித்த போது ஏப்ரல் 17-ம் தேதி கூறியது.

## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| இலங்கை-எதிர்த் தாக்குதல் தளம் .. .. | 1 | ஜப்பானோடு போராட அதிகக் கப்பல்கள் .. | 7 |
| முரசொலி .. .. .. .. | 2 | பிரிட்டனுக்குச் சீன பாராட்டு .. .. | 7 |
| பாட்டு—" சுகம் பெறும் நாள் " .. .. | 2 | சிறு கதை: பிரிந்த காதலர்களைச் சேர்த்தது ராணுவம் .. .. .. .. | 8 |
| தலையங்கம்—பர்மாவில் போர் நிலை .. .. | 3 | அடிப்பதிலே போட்டி .. .. .. | 9 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 4 | யுத்த நாட் குறிப்புக்கள் .. .. .. | 12 |
| ரயில் பிரயாணத்தால் நேரும் கஷ்டங்கள் .. | 5 | | |


# முரசொலி

"ஜெர்மனியின் மீது பலமான விமானப் போர் ஆரம்பமாகி விட்டது. சென்ற இரண்டு வாரங்களாக பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளின் முழு பலத்தையுங் கொண்டு போராட்டம் நடைபெறுகிறது. நாஜிகளின் விமானத் தொழிற்சாலைகளையும் விமான ஸ்தாபனங்களையும் 1,500 முதல் 2,000 விமானங்கள் ஒரே சமயத்தில் வந்து தாக்குகின்றன."

—மிஸ்டர் ஹென்றி ஸ்டிம்ஸன்,
அமெரிக்க யுத்த மந்திரி ஏப்ரல் மாதம் 13-ம் தேதி கூறியது.

* * * * * *

"இந்த யுத்தம் இன்னும் முடிவடையவில்லை ; நாம் பூரண வெற்றியடைய நெடுங்காலம் செல்லலாம். எப்படியும் அதை அடையத் தான் வேண்டும்."

—மேன்மை தங்கிய சர் க்ளாட் ஆக்கின்லெக்,
இந்திய பிரதம படைத் தலைவர் ஏப்ரல் மாதம் 12-ம் தேதி லாகூரில் கூறியது.

# "சுகம் பெறும் நாள்"

(நடையலங்காரம் கண்டேன் என்ற 'குபேர குசேலர்' மெட்டு.)

பல்லவி

சுகம் பெறும் நாளைக் கண்டோம்—நம(து)
அகந்தனில் புகுந்திட முனைந்தவன் மடிந்து நாம் (சுகம்)

அனுபல்லவி

அகந்தை கொள் நாசி அறிவற்ற தோசி
ஜெகந்தனை வருத்திப்பின் மறைந்ததைப் பேசி (சுகம்)

சரணம்

வீர மிகுந்தநம் தீரர்கள் விரைந்து
வேவு பார்த்தெதிரியின் இலக்குகள் தெரிந்து
காரிருளாயினும் தூரமதாயினும்
கால நிலையறிந்து தாழக்கீழே பறந்து
மா பெருவெடி மருந்துகள் நிறைந்திலங்கு
ரா ணுவதளமு மிடிந்து தூ ளாக
வே குண்டு பொழிவதாலே கண்டுமே தொழிலாலை
கொண்ட ஆயுதச்சாலை தனில்புரியும் வேலை
யாவு மோய்ந்து தேய்ந்து எதிரிகள்
நின்றே தவிக்க இன்றே நம்படை வென்றே புவியில் (சுகம்)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV • 1944-ம் ஏப்ரல் 21உ, வெள்ளிக்கிழமை இதழ் 33

## பர்மாவில் போர் நிலை

சென்ற வாரம் பர்மியப் போராட்டம் இருந்து வந்த நிலைமையில், இன்று இல்லை. நேச நாட்டுப் படைகள் தம் வீரமும் பிடிவாதமும் துலங்க, போர்முனையில் பிளந்து கொண்டு முன்னேறுகிறார்கள். ஜப்பானியர்கள் தளவாடங்கள் குறைவு. ஏனென்றால், பர்மா, மலைகளடர்ந்த நாடு. மலைகளின் மேலும், ஆறுகளைக் கடந்தும் அவற்றை ஏற்றிக் கொண்டு வருவதற்கான வசதிகள் அவர்களுக்கு அங்கில்லை. காட்டு மிராண்டிகளைப் போல, மலைக் காடுகளிலே பதுங்கியிருந்து போராடுகிறார்கள். ஆனால் நேசநாட்டுப் படைகளுக்கோ இந்த வசதிகளெல்லாம் இருக்கின்றன. படைகளையும், தளவாடங்களையும், உணவுப் பொருட்களையும் ஏற்றிப்போக விமானங்களும் ரயில்வேக்களும் இருக்கின்றன. மோட்டார் லாரிகளும் ரோடுகளும் இருக்கின்றன. விமானங்களை ஜப்பானியர்கள் எதுவும் செய்ய முடியாத நிலைமையி லிருக்கின்றன. ரயில் பாதைகள் அவர்கள் அணுகமுடியாதபடி தூரத்திலிருக்கின்றன. ரோடுகளைத் தான் ஜப்பானியர்கள் சேதப்படுத்தக் கூடும். சேதப்படுத்திக் கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் நம் படையினர் உடனுக்குடன் பழுதுபார்த்து விடுகிறார்கள். ஜப்பானியர் எண்ணம் இங்கேயும் பலிக்கவில்லை. ஆகவே, இம்பால் கொஹிமா ரோட்டில் தம் கை வரிசைகளைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மணிப்பூரைக் கைப்பற்ற பகீரத முயற்சி செய்கிறார்கள். இதற்கு, திம்மாப்பூர் என்றொரு பெயருமுண்டு. இதைக் கைப்பற்ற அவர்களால் முடியவில்லை. ஒளிந்திருந்து, மறைந்திருந்து, தாக்கி, வெற்றி பெறுவது என்பது, முடிகிற காரியமா? நேசநாட்டுப் படைகளின் பலம் ஜப்பானியர்கள் அறியார்களா? அறிவார்கள். என்றாலும், பலித்த வரையிலும் பலிக்கட்டும் என்ற எண்ணமோ என்னவோ? மழைகாலம் நெருங்கிவிட்டது. மழை ஆரம்பமாகிவிட்டால், ஜப்பானியர், காடுகளிலிருந்து போராட முடியாது. கட்டாயம் சமவெளிகளுக்குப் போய்த் தான் ஆகவேண்டும். அப்போது நேசநாட்டுப் படைகளிடம் தகுந்தபடி மரியாதை கிடைக்கும். எப்படி யென்றால், நேசநாட்டுப் படைகளுக்குத் தேவையான போக்குவரவு சாதனங்கள் இருக்கின்றன. பழையை விமானங்கள் பொருட்படுத்தாது பறக்கின்றன. ரயில்களும் மோட்டார்களும் ஓடுகின்றன. ஆகவே படைகளையும், தளவாடங்களையும், உணவுப் பொருட்களையும் பிறவற்றையும் எளிதிற் கொண்டு போய்ச் சேர்க்கலாம். இப்போது இம்பாலையடுத்த சமவெளியில் நடந்த போராட்டத்தி லிருந்தே ஒரு விஷயம் தெள்ளத் தெளிய விளங்குகிறது. ஜப்பானியர் காடுகளில் போராடுவதற்கு மட்டுந்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அந்தச் சமவெளியில் கூர்க்கப் படையினருக்கு ஆற்றமாட்டாமல் தோற்றனர். கூர்க்கர்களா விடுபவர்கள்! ஒரு ஜப்பான் படைக் கோஷ்டியில் 50 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் 49 பேரைக் கொன்று, மிஞ்சிய ஒருவரையும் கைதி செய்தனர். ஜப்பானியர்கள் எந்த முக்கியமான இடத்திலும் நிலைக்கக் கூடவில்லை. அவர்களுக்கு ஏராளமான சேதம். இங்கே ஒரு கேள்வி எழக் கூடும். ஜப்பானியர்கள் முன்னேறித் தாக்கும் போது, ஏன் நேச நாட்டுப் படைகள் பெருவாரியாக முன்னேறித் தாக்கக் கூடாது என்னும் கேள்வி எழத்தான் செய்யும். 'ஓடு மீனோட உறு மீன் வருமளவும் வாடி யிருக்குமாங் கொக்கு' என்னும் செய்யுளுக்கு இணங்க, சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார் தென் கிழக்காசிய மகா படைத் தலைவர். அதற்கான ஆயத்தங்கள் எல்லாம் இப்போது செய்து கொண்டிருக்கிறார். தன் காரியாலயத்தை இப்போது டில்லியிலிருந்து இலங்கைக்கு மாற்றிக் கொண்டு விட்டார். கண்டி மிகப் பழைய இராசதானி நகரமாயிருந்தது. அங்கே தன் தலைமைக் காரியாலயத்தை அமர்த்திக் கொண்டார். இனி இந்து மகா சமுத்திரத்தில் ஜப்பானியர் கொட்டமடங்கிவிடும். ஏனென்றால் தென் கிழக்காசியப் போர் முனைகளில் ஜப்பானிய கப்பற் படையை, காண ஒட்டாதபடி அமெரிக்கப் படையினரும் ஆஸ்திரேலியப் படையினரும் அடிக்கிறார்கள். ஆகவே, மேற்கே வருவதைத் தவிர, அவற்றிற்கு வேறு வழியில்லை. அப்போது அட்மிரல் சோமர்வில் தலைமையிலுள்ள நேச நாட்டுக் கப்பற் படை இலங்கையினின்று கிளம்பிப் போய்த் தாக்கக் கூடும்.

இந்தக் காரியாலயம் மாற்றப்பட்டதற்கு மற்றொரு காரணமுமுண்டு. இலங்கையிலிருந்து 1000 மைல் தூரத்தில் தான் பர்மா, சிங்கப்பூர், மலேயா முதலிய எதிரி நாடுகள் இருக்கின்றன. நியூ டில்லிக்கும் இவற்றிற்கும் வெகு தூரம். அன்றியும் தரைப் படையையும் விமானப் படையையும் கொண்டு பர்மாவில் ஜப்பானியர்களோடு போராடினால், வெற்றி பெற தாமதமாகுமென்று போர் நிபுணர்கள் கருதினார்கள். ஆகவே, பர்மாவைக் கடல் மூலமாகவும் தாக்கும் பொருட்டுத்தான் இலங்கையைத் தளமாகக் கொண்டார் போலும்.

# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் போராட்டத்தைக் குறித்து, மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் ஏப்ரல் மாதம் 9-ம் தேதி ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தற்போதுள்ள நிலைமையைப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஜெர்மன் படைகள் பேரிங் கடலிலிருந்து இந்து மகா சமுத்திரம் வரையிலும் பலவாறாக விரவி யிருந்து போராடின; வட கடல் வழியாக ரஷ்யாவுக்கு நேச நாடுகள் அனுப்பும் சப்ளைகளைத் தடை செய்ய முயற்சித்தன; ஆனால், அம்முயற்சிகள் பலிக்கவில்லை என்று சென்ற மாதம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். வியாபாரக் கப்பல்களுக்கு நேர்ந்த சேதத்தைக் குறித்துக் குறிப்பிடும் போது, வெகு தூரத்திற் கப்பால் உள்ள கடல்களில் தான் இந்தச் சேதங்கள் ஏற்பட்டன வென்றும், பிப்ரவரி மாதத்தில் நேர்ந்த சேதத்தைவிட மார்ச்சு மாதத்தில் சற்று அதிகச் சேதமான போதிலும், பொதுவாக, இந்தச் சேதம் கொஞ்சம் என்று தான் சொல்ல வேண்டும் என்று குறிப்பிட் டிருக்கிறார். நேச நாடுகளின் வியாபாரக் கப்பல்கள் அளவிலும் பிற வசதிகளிலும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் பலம் மிகுதியாகத் தான் இருக்கிறது. ஆகவே நம் தரைப் படையும் விமானப் படையும் இதைச் சமாளிக்கும் பொருட்டுப் பெரு முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. அட்லாண்டிக் யுத்தத்தின் முக்கியத்துவத்தைக் குறித்தும், பிரிட்டன் மீது உபயோகிக்க முக்கியமான தளவாடம் என்று ஹிட்லர் கூறிய ஆயுதத்தை மழுங்கச் செய்ய வேண்டிய அவசியத்தைக் குறித்தும், இந்தக் கூட்டு அறிக்கையில் வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

பிரிட்டன் மீது ஹிட்லர் போர் தொடுத்த காலம் முதலே, ஒரு விஷயம் மட்டும் அவருக்கு நன்றாகத் தெரியும். அதாவது ஒரு துறையில்,—கடலாதிக்கத்தில்—தன்னை விட எதிரிக்கு மிகுந்த பல முண்டு என்று ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இந்த ஆதிக்கத்தைக் குலைக்க வேண்டி, நேச நாடுகளுக்கும் நடு நிலைமை நாடுகளுக்கும் சொந்தமான வியாபாரக் கப்பல்களை மூழ்கடிக்கும் பொருட்டு, நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டுவதில் முனைந்தார்.

**அட்லாண்டிக் போர்—ஹிட்லர் மன உறுதியும் பெர்லின் வீண் பெருமையும்**

பிரிட்டிஷ் கப்பல்களை அசைய ஒட்டாதபடி நாளடைவில் கட்டிப் போட்டு விடலாமென்று ஹிட்லர் உண்மையிலேயே மிகுந்த மனோ உறுதியோ டிருந்தார். இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் விளைவிக்கும் சேதங்களைக் குறித்து, சமய பேத மில்லாமல் பெர்லின் ரேடியோ வீண் பெருமையடித்துக் கொண்டிருந்தது. 4 வருஷங்களுக்கு முன்பு 1940-ம் வருஷம் ஆகஸ்ட்டு மீ 6 உ பெர்லின் ரேடியோ கூறியதாவது :—

"பிரிட்டன் முழுதும் ஸ்தம்பித்து விட்டது. அதற்கு இரண்டே வழிகள் தான் உண்டு. ஒன்று பட்டினி; மற்றொன்று குலைந்து போதல்."

மறு நாள் ஆகஸ்ட்டு மாதம் 7-ம் தேதி பெர்லின் ரேடியோ கூறியதாவது :—

"பிரிட்டிஷ் கப்பல்கள் எல்லாவற்றையும் இன்னும் இரண்டு மாதங்களில் மூழ்கடித்து நாசஞ் செய்து விடுவோம்."

பன்னிரண்டு மாதங்கள் கடந்தன. கொப்பல்ஸ் பேச்சின் சுரம் குறைய ஆரம்பித்தது. 1941-ம் வருஷம் ஜூலை மீ 4 உ, சீசன் ரேடியோ கூறியதாவது :—

"இப்பொழுது எதிரிக் கப்பல்களை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் விகிதப்படியே இன்னும் சில மாதங்கள் மூழ்கடித்துக் கொண்டிருந்து யுத்தத்தில் வெற்றி பெற்று விடும்."

மீண்டும் ஒரு வருஷம் கடந்தது. 1942-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதத்தில், ஜெர்மானிய ரேடியோ கூறியதாவது :—

"அட்லாண்டிக் போராட்டத்தில் பிரிட்டிஷார் ஏற்கெனவே தோற்று விட்டார்கள்."

அந்தக் காலத்தில் நிலைமை அவ்வளவு திருப்திகரமா யில்லை. ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு நேச நாட்டுப் படைகள் போராடிக் கொண்டு தான் இருந்தன. என்றாலும், மூழ்கடிக்கப்பட்ட நேச நாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை அதிகமாகத் தானிருந்தது. 1942-ம் வருஷம் செப்டம்பர் மீ 8 உ காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

"கப்பற் படைச் சேதம் இன்னும் அதிகமாகத் தான் இருக்கிறது. ஆனால், ஜூலை, ஆகஸ்ட்டு, செப்டெம்பர் மாதங்களில் மூழ்கியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால், அதற்கு முந்திய மாதங்களை விடக் குறைவாகத் தான் இருக்கிற தென்று மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகிறேன்."

1943-ம் வருஷம் நிலைமை மாறியது. 1942-ம் வருஷமே திட்டமிட்டபடி, தகுந்த ஆயத்தங்கள் செய்ததன் பயனாக, நீர் மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போராட்டம் ஏற்றபடி பலனளித்தது. 1941-ம் வருஷம் பிப்ரவரி மீ 11 உ காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் கீழ்க் கண்டவாறு கூறினார் :—

"ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு நடை பெறும் போராட்டம் முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கிறது. நம் நிலை குன்றா திருக்கிறோம். அதைவிட மேலான நிலைமையிலிருக்கிறோம்."

மூன்றரை மாதங்களுக்குப் பிறகு போர்ட்ஸ்மத்தில் பேசிய மிஸ்டர் ஆண்டனி ஈடன் கூறியதாவது :—

"அட்லாண்டிக் செய்திகள் ஊக்கந் தருவனவாய் இருந்து கொண்டிருக்கின்றன. நாம் கட்டிக் கொண்டிருக்கும் வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது. நமது வியாபாரக் கப்பல்களுக்கு ஏற்படும் நஷ்டத்தின் அளவு குறைந்து கொண்டு வருகிறது. மூழ்கடிக்கப்படும் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் எண்ணிக்கையும் அதிகப் படுகிறது. ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு இன்னும் கடுமையாகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இது இன்னும் முடி வடைய வில்லை. ஆனால், நாம் சாதித்துள்ளதை விட மேலான பலன் நமக்குக் கிடைத்திருக்கிற தென்று நாம் கருதுகிறோம்."

மூழ்கடிக்கப்பட்ட நேசநாட்டு வியாபாரக் கப்பல்களை விட பல மடங்கு வியாபாரக் கப்பல்கள் புதிதாகக் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டன. ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு நடை பெற்ற போராட்டமும் வெற்றிகரமாகவே இருந்தது. என்றாலும் பழைய பல்லவியைக் கொண்டே ஜெர்மன் பிரசாரம் நடந்து கொண்டிருந்தது. 1943-ம் வருஷம் ஜனவரி மீ 1 உ பெர்லின் வானொலி நிலையத்தினின்று கீழ்க் கண்டவாறு ஒலி பரப்பப்பட்டது :—

மாதங்கள் செல்லச் செல்ல, ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் சக்தி அதிகரித்துக் கொண்டே போகிறது ... இந்தப் போராட்டத்தில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் முதலில் சோர்வடையப் போவதில்லை என்பது உறுதி."

ஒரு மாதத்திற்குப் பிறகு, ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே அடியோடு அழிந்து விடப் போகின்ற தென்று கூறியது. பிறகு அதன் தொனி மாறியது. மே மாதம் 6-ம் தேதி அடமிரல் லிவெட்சோ என்னும் கப்பற் படை யதிகாரி யொருவர் கூறியதாவது :—

"நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் கிடைக்கும் வெற்றிகள் அதிகப்பட்டுக் கொண்டு போகு மென்று நம்புவதற்கில்லை.... இந்த நீர் மூழ்கிக் கப்பல்களினின்று தற்காத்துக் கொள்ள எதிரி எல்லா வகைகளிலும் முயன்று வெற்றி யுற்றான்."

இரண்டு மாதங்களுக்குப் பிறகு 1943-ம் வருஷம் ஜூலை மாதம் அவர் கூறியதாவது :—

"நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்க்கும் தற்காப்புக்களை எதிரிகள் பெருக்கிக் கொண்டார்கள். அதன் பயனாக, நம் கப்பல்கள் தளத்தை விட்டுக் கிளம்பியது முதல், திரும்பி வந்து சேருகிற வரை, இடை விடாது கஷ்டப்பட்டுப் போராடியே தீர வேண்டி யிருக்கிறது.. நமது நீர் மூழ்கிக் கப்பல்கள் தொடுக்க வேண்டிய போராட்டம் மகா கஷ்டமாகி விட்டது...... சுருங்கச் சொன்னால், நம் எதிரியின் கை இப்பொழுது ஓங்கி யிருக்கிறது. தன் தற்காப்பை மேலும் பலப் படுத்திக்கொள்ள எதிரி முயன்று

(6-ம் பக்கம் பார்க்க)

# ரயில் பிரயாணத்தால் நேரும் கஷ்டங்கள்

## தள்ள வேண்டியவையும் கொள்ள வேண்டியவையும்

### பிரயாணத்தைக் குறைக்கவும்

(ஸ்ரீமதி விமலேஸ்வரி கோவிந்தசாமி)

இன்றையத் தினம் நடந்து வரும் இந்த உலக யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு என்னென்ன வகைகளைக் கையாள வேண்டும் என்ற எண்ணமாகவே நமது நேச நாடுகள் இன்று இருந்து வருகின்றன. நம் இந்திய தேசத்து மக்களும் இந்த யுத்தத்தில் கூடிய சீக்கிரம் வெற்றி பெற்று, நீதியும், நிம்மதியும் நிறைந்த வாழ்க்கையை நடத்த மிகுந்த ஆவலுடையவர்களா யிருக்கிறோம். ஆயுதங்களைத் தூக்கிச் சண்டை செய்பவர்கள் மட்டும் யுத்தத்தில் வெற்றிபெற வேண்டியது அவசியம் என்பது தவறு. ஆயுதத்தைச் செய்பவர்களும் தேவை. அவற்றை எடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பவர்களும் தேவை. இந்த ஆயுதங்களை வாங்குவதற்குப் பணமும் தேவை. இந்தப் பணத்தைக் கொடுக்கும் மக்களும் தேவை. போர் வீரர்கள் உண்பதற்கு உணவு தேவை. அதே போல உணவை விருத்தி செய்யும் விவசாயிகளும் தேவை. இவ்வளவு பேர்களும் சேர்ந்தால் தான், இந்தப் போரை யாகட்டும், வேறு எந்த யுத்தத்தை யாகட்டும், ஒரு தேசம் ஜெயிக்க முடியும். ஆதலால் இந்த யுத்தத்தை நாம் வெற்றிபெற நடத்துவதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்துவது நம் கடமை யாகும்.

**விலக்க வேண்டியவை**

செய்ய வேண்டிய வேலைகள் மேலே கூறியவை. இவ்வளவும் அவசியம் என்றால் நமது மக்கள், வெற்றியை அடைய வேண்டின் செய்யாமலிருக்க வேண்டியவையும் பல உண்டு. ஒரு யுத்தத்தை வெற்றி பெற நடத்துவத்ற்கு இடையூருக எந்தெந்த வேலைகள் இருக்கக்கூடுமோ, அவற்றை நாம் கண்டிப்பாக விலக்குவது அவசியமாகும். உதாரணமாக போருக்குச் செல்லுபவர்களைத் தடுக்கக் கூடாது. போர்க் கருவிகள் செய்பவர்க்கு இடையூறு செய்யக் கூடாது. ஆயுதங்கள் படைகள் இவற்றின் போக்கு வரத்திற்குத் தடை ஏற்படக்கூடாது. பொய் வதந்திகளைப் பரத்தக்கூடாது. நம்பவுங் கூடாது. இவ்வளவையும் எந்த தேசத்து மக்கள் செய்யாமல் விடுகிறார்களோ, அந்த நாடு சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் வெற்றியடையும்.

**இடையூருயில்லா திருந்தால் நல்லது**

இந்தியாவிலுள்ள ஆண், பெண் குழந்தையாகிய சகலரும் இன்று மேற்கூறிய வண்ணம், ஒன்று, செய்ய வேண்டிய வேலைகளில் கவனம் செலுத்திச் செய்ய வேண்டும் ; அல்லது மேலேகூறிய தள்ள வேண்டிய வேலைகளையாவது ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். கொள்ள வேண்டியவைகளைக் கொண்டு, தள்ள வேண்டியவைகளைத் தள்ளினல் உத்தேசம். இவ்விரண்டும் முடியாதவர்கள் யுத்த முயற்சிக்கு இடையூருவது செய்யாமலிருந்தால் நல்லது. நரி வலமிருந்து இடம் போனாலும் இடமிருந்து வலம் போனாலும் கவலை யில்லை ; மேலே மட்டும் விழாமற் போனல் போதும். இதைக் கூடச் செய்வதற்கு நமது நாட்டு மக்கள் இன்றையத் தினம் முன் வராது இருந்தால், அது பெரிதும் வருந்தத் தக்கதாகும். இன்றையத் தினம் நாம் ஒதுக்கித் தள்ள வேண்டியவற்றில் தலை சிறந்தது, ரயில் பயணம். இந்த யுத்தத்தை மும்முரமாக நடத்துவதற்கு இரும்பும் மாழும் அவசியம். இவற்ருல் செய்யப்பட்ட ரயில் வண்டிகளும் அவசியம். நாட்டில் ஓடிக்கொண்டிருந்த ரயில் வண்டிகளில் பெரும் பாகம், பல யுத்த அரங்கங்களிலும் இன்று துருப்புகளையும் ஆயுதங்களையும் தூக்கிச் சென்ற வண்ணம் ஓடுகின்றன. ஆதலால், ரயில் இன்ஜின்களுக்கும் வேலை பன்மடங்கு அதிகமாகி விட்டது. பொது மக்கள் உபயோகிக்கக் கூடிய. வண்டிகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து விட்டது. அப்படி குறைந்திருக்கும் ரயில் வண்டிகளுங் கூட, அடிக்கடி ஓடுவதற்கு பல தடுக்க முடியாத நெருக்கடிகளும் இடையூறுகளும் தற்போது உள்ளன. அவற்றுள் முக்கியமானது நிலக்கரிப் பஞ்சம். இதையும் சமாளித்துக் கொண்டு ஓடும் ரயில்களும், நம் நாட்டை நாலா பக்கங்களிலும் இரவு பகலாய் இங்கும் அங்கும் ஓடிப் பாதுகாக்கும் எண்ணற்ற துருப்புகளை ஓரிடமிருந்து மற்றோரிடம் எடுத்துச் செல்லப் பயன் படுகின்றன. ஆதலால் பொது ஜனங்கள் இந்தச் சமயத்தில் ரயிலில் அனுவசியமாய்ப் பிரயாணம் செய்வது துருப்புகளுக்கும் யுத்த முயற்சிக்கும் பெரும் இடையூருக முடிகின்றது. நமது நாட்டுப் பாதுகாவலில் நாட்டமுடைய எந்த ஆணும் பெண்ணும் இந்த மாபெரும் இடையூறை உண்டாக்கக் கூடாது.

**பிரயாணிகளுக்குங் கஷ்டம்**

அது மட்டுமல்ல. பிரயாணம் செய்யும் நமக்குங் கூட அளவு கடந்த கஷ்டம் இதனல் உண்டாகின்றது. ஆறு, எழு வண்டித் தொடர்கள் ஓடிக்கொண்டிருந்த ஒரு பாதையில், இப்போது, ஒன்று தவறினல் இரண்டு வண்டித் தொடர்களே ஓடுகின்றன. இதில் பெரும் பாகம், யுத்த முயற்சியில் ஈடுபடும் பலதிறப்பட்ட மக்கள் பயணம் செய்யப் பயன் படுகின்றது. ஆதலால் பொது ஜனங்களாகிய நாம், முன்பு போலவே நமது அனுவசிய பிரயாணத்தை மேற்கொண்டு, ரயிலில் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருப்பது ஒருவருக்காவது நன்மை தரக்கூடியதல்ல. ஆறு, எழு வண்டித் தொடர்களில் போய்க் கொண்டிருந்த ஆயிரம் மக்கள், ஒரு வண்டித் தொடரில் போவதால் எற்படும் ஜன நெருககடி எவ்வளவு என்று யோசித்துப் பாருங்கள். முன்பு சுமார் 20 பேர்கள் செல்லக்கூடிய 'கம்பார்ட்மெண்டில்' இப்போது குறைந்தது 40 பேர்கள் சில சமயங்களில் 50 பேர்கள் கூட பிரயாணம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் யார் ? பொது மக்கள் தான். பிள்ளைக் குட்டிகளையும் பெட்டி பேழைகளையும் அள்ளையிலும் அரையிலும் தூக்கிக் கொண்டு வண்டிக்குள் அடித்து இடித்துக் கொண்டு ஏறும் பெண்களின் காட்சி பரிதாபமாக இருக்கிறது. ஏறின பின், நிற்பதற்கும் இடமில்லாமல் பெட்டிமேல் ஆளும் ஆள் மேல் பெட்டியுமாக நெருங்கிக் கொண்டும், கண்விழி பிதுங்கக் கஷ்டப்பட்டுக் கொண்டும் இருக்கும் பெண்களையும் ஆண்களையும் தினந்தோறும் ரயில்களில் காண்கிறோம். இதில் எவ்வளவு கேவலமான வார்த்தைப் பிரயோகங்கள், சண்டைகள் நடக்கின்றன் என்று பார்த்தால், அது இன்னும் மோசம். இவ்வளவு சிரமத்தையும் பணங் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டு, பகலிலே பதைத்தும் இரவிலே புழுங்கியும் போகும் இந்த பல்லாயிர கணக்கான மக்கள் ஏன் இந்தப் பிரயாணம் செய்கின்றார்கள் என்று கவனித்தால், ஒரு பக்கம் சிரிப்பும், மற்றொரு பக்கம் ஆத்திரமும் வருகின்றது. சொந்தக்காரப் பிள்ளைக்குக் காது குத்தல், நிச்சயதார்த்தம், திருவிழா, உறவினர்க்கு நோய், இதுபோன்ற சிறு சிறு காரணங்களை முன்னிட்டு ஆண்களும் பெண்களும் என் அல்லோலப் படவேண்டும். எந்தெந்த வேலை நேராகப் போகாமல் காகிதம் மூலமாகவே முடித்துக் கொள்ளலாமோ அதையெல்லாம் பயணத்தின் மூலம் எவரெவர் தற்போது செய்கிறார்களோ, அவர்கள் அத்தனைப் பேரும், தங்களுக்குத் தொந்திரவையும் தேசப் பாதுகாப்புக்கு ஆபத்தையும் உண்டாக்குகின்றனர் என்பதை நாம் அறிய வேண்டும். குறிப்பாகப் பெண் மக்கள் தான் இந்த விஷயத்தில் அக்கரை கொள்ள வேண்டும், கட்டுச் சோற்றைக் கட்டி வைத்துக் கொண்டு காலரா மிகுந்த ஊரில் திருவிழா பார்க்கக் கட்டாயம் போகத்தான் வேணடுமென்று மனைவி ஒரு காலிலே நின்ருல், எந்தக் கணவன் தான் அந்தச் சங்கடத்தினின்று மீள முடியும்.

**மோட்டார் பயணத்தையும் தவிர்க்க**

இதே போல் தான் மோட்டார் பிரயாணமும். தற்கா ம் மோட்டார்கள் அநேகமாக யுத்த சம்பந்தமான முக்கிய காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றன. பெட்ரோல் கஷ்டம் வேறு. ஆதலால் மோட்டார் பயணத்தைக் கூடியவரை தவிர்ப்பது நல்லது.

எனவே இந்த யுத்தத்தில் முழு வெற்றியை நாம் விரைவிற் அடைய விரும்பினல், செய்ய வேண்டியவற்றைச் செய்து,

(6-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறான். இப்போது எதிரிக்குள்ள வசதியான நிலைமையை அவனிட மிருந்து பிடுங்கிக் கொள்ள நாமும் நம்மாலான வரை முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.''

அட்மிரல் லுவெட்ஸோ குறிப்பிடும் தற்காப்புக்கள் எவை? அதிகமாகவும் உயர்ந்த முறையிலும் கட்டப்படும் கப்பல்களும், அவற்றை உயரிய முறையில் நிர்வகிப்பதுந் தான். கப்பல்களின் எண்ணிக்கை அதிகப்படுவதனால், சேதப்படும் கப்பல்களுக்கு ஈடு செய்து கொள்ளுகிறது. படைகளையும் தளவாடங்களையும் பல யுத்த அரங்கங்களுக்கும் அனுப்ப உதவுகிறது. ஏராளமான புதிய கப்பல்கள் கட்டப்பட்டதால் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் ஜம்பம் சாய வில்லை. அமெரிக்காவில் 1941-ம் வருஷம் 1,088,000 டன் கப்பல்கள் கட்டப்பட்டன; ஆனால், 1943 ம் வருஷம் 9,000,000 டன் கப்பல்கள் கட்டப்பட்டன வென்று, அமெரிக்க யுத்த உற்பத்தி போர்டின் நிர்வாக உப தலைவர் மிஸ்டர் சார்லஸ் வில்ஸன் குறிப்பிட்டார். அன்றியும் 1944-ம் வருஷத்தில் முந்திய வருஷத்தை விட 80 சத விகிதம் அதிகமாக உற்பத்தி யாகு மென்றும் சொல்லுகிறார். அன்றியும், பிரிட்டனிலும், கனடாவிலும், ஆஸ்திரேலியாவிலும் கப்பற் கட்டுதல் வெகுவாக உயர்ந்திருக்கிறது.

**நீர் மூழ்கிக் கப்பல்களுக்கு எதிர்ப்பு**

இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் யுத்த சம்பந்தமாகக் கவனிக்க வேண்டிய மற்றொரு அம்சமு மிருக்கிறது. அது தான் நேச நாட்டுக் கப்பல்கள் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களுக்கே அகப்படாமலிருந்து எதிர்த்துத் தாக்குவது. இந்த ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் தொல்லைகளோடு, போராடும் முறையில், மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. இதன் பயனாக, வியாபாரக் கப்பல் சேதம் குறைந்தது மட்டு மல்ல; ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களுக்குச் சேதமும் அதிகரித்தது. ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டப்பட்டுக் கொண்டே யிருப்பதால், இந்த சேதத்தை பொருட் படுத்த வேண்டிய தேவையே யில்லை யென்று சொல்லலாம். ஆனால், ஒரு விஷயம். இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டப்படும் தளங்களையும் தொழிற் சாலைகளையும் நேச நாட்டு விமானங்கள் தாக்கிக் கொண்டே யிருக்கின்றன. ஆகவே, ஜெர்மானியர்கள் வேலை செய்யவே முடியாது என்று சொல்லுவதை விட, அவற்றைக் கட்டுவது மிகவும் கஷ்டமானது என்று சொல்லலாம்.

நான்கு வகைகளில் நீர் மூழ்கி கப்பல்களை எதிர்த்துப் போராடலாம்: (1) நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டு மிடங்களை விமானங்களைக் கொண்டு தாக்குதல். (2) பிரான்சிலும், ஹாலந்திலும் உள்ள ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் நிலையங்களை விமானங்களைக் கொண்டு தாக்குவது. (3) நீர் மூழ்கிக் கப்பல்கள் செய்வதற்குத் தேவையான பகுதிகள் தயாரிக்கப்படும் தொழிற் சாலைகளையும் பிற விடங்களையும் விமானங்களைக் கொண்டு தாக்குவது. (4) விமானங்களிலிருந்தும் துணைக் கப்பல்களைக் கொண்டும், கடலில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களைத் தாக்குதல். இந்த நீர் மூழ்கிக் கப்பல்களோடு போராட வேண்டி நேச நாட்டினர் கையாளும் முறைகளின் பலனைக் குறித்து, ''வால்கிஷர் பியோபாக்டர்'' என்னும் பத்திரிகையில் அடால்ப் வாக்னர் தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார். (வாக்னர் ஹிட்லரின் மிகப் பழைய கூட்டாளி. இவர் சென்ற திங்கட்கிழமை இறந்துபோனதாக பெர்லின் ரேடியோ அறிவித்தது.) இந்த அறிக்கையின்படி, அந்தத் தலைவர் கூறியதாவது:—

''நீர் மூழ்கிக் கப்பல் போராட்டத்தை நிறுத்தி விட வேண்டிய நிர்பந்த நிலைமைக்கு நாம் வந்து விட்டோம். ஏனென்றால் தன்னைத் தற்காத்துக் கொள்ள, தகுந்த முறையை எதிரி கண்டு பிடித்து விட்டான்.''

**மற்றொரு டோனெட்ஸ் போர்—ரஷ்யாவுக்கு நேச நாடுகளின் உதவிக் கப்பல்**

இதைக் கொண்டு நேச நாட்டுக் கப்பல்களை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்குவதில்லை என்று நினைத்து விடப் படாது. சென்ற மார்ச்சு மாதம் 7-ம் தேதி, காமன்ஸ் சபையில் பேசிய கப்பல் படை மந்திரி மிஸ்டர் ஏ. வி. அலெக்சாண்டர், அட்மிரல் டோனெட்ஸ் பரந்த பகுதிகளில் மீண்டும் தாக்க முயற்சிக்கலா மென்றும், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் பலம் இன்னமும் அதிகமாய்த் தானிருக்கிறதென்றும் சொன்னார். அவர் மேலும் கூறியதாவது:—

''ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு நடை பெறும் போராட்டத்தின் போக்கு நேச நாடுகளுக்குச் சாதகமாயிருக்கிறது; என்றாலும், அவற்றால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை மறைத்து வைக்க நான் விரும்பவில்லை.''

சமீபத்தில் அமெரிக்க கப்பற் படை மந்திரி மிஸ்டர் நாக்ஸ் கூறியதாவது:—

''வட அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் ஏராளமாகப் போராடக் கூடும்.''

இது வரை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் பெரும்பாலும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் வட கடலிலுந் தான் போராடிக் கொண்டிருந்தன. ஆனால் இங்கிருந்து நேச நாட்டு எதிர்ப்புத் தாக்குதல்களால் அவை விரட்டப்பட்டு விட்டன. ஆகவே, பல கடல்களிலும் போய்த் தம் கை வரிசையைக் காட்ட வேண்டிய நிலைமை அவற்றிற்கு ஏற்பட்டது. இதனால் தான் மார்ச்சு மாதத்தில் சற்று அதிகச் சேதம் நேச நாட்டுக் கப்பல்களுக்கு ஏற்பட்டதென்று மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் தம் கூட்டு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர். அன்றியும் ரஷ்யாவுக்குத் தளவாடங்கள் கொண்டு போய்க் கொண்டிருந்த கப்பல்களை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் அதிகமாகத் தாக்கி மூழ்கடித்தன. இதற்கு மற்றொரு காரணம். இந்தத் தளவாடக் கப்பல்களுக்குத் துணையாக விமானங்களும் துணைக் கப்பல்களும் தான் போயின. அதிகமான துணைக் கப்பல்கள் கிடைக்கிற வரை, இப்படிப்பட்ட நஷ்டங்கள் எதிர் பார்க்கப்பட வேண்டியவை தான். இப்போது அதி வேகமாகத் துணைக் கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, துணைக் கப்பல்கள் இல்லை என்ற குறை பாட்டிற்கு இனி இடமிருக்காது.

ரஷ்யாவுக்கு நேச நாட்டினர் அனுப்பும் தளவாடக் கப்பல்கள் தாக்கப்படுவதைக் குறித்துத் தான் சர்ச்சில்-ரூஸ்வெல்ட் கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர். நேச நாடுகளிலிருந்து ரஷ்யாவுக்கு சப்ளைகள் போக ஒட்டாதபடி தடுக்க நெடு நாட்களாக ஜெர்மானியர்கள் முயன்று கொண்டிருந்திருக்கிறார்கள். இதன் பொருட்டு அவர்கள் பெரும் சேதத்திற்குக் கூட உள்ளானார்கள். சென்ற 1943-ம் வருஷ டிசம்பர் மீ 26உ ''ஸ்கார்ன் ஹார்ஸ்ட்'' என்னும் மகத்தான தோர் யுத்தக் கப்பலையே இதன் பொருட்டு வட முனைக்கு அப்பால் பலி கொடுத்தனர். ஏப்ரல் மாதம் 3-ம் தேதி 'டர்பிட்ஸ்' என்னும் 42,000 டன் யுத்தக் கப்பலையும் ஜெர்மானியர்கள் சேதப்படுத்திக் கொண்டார்கள். ஏராளமான தளவாட சப்ளைகள் ரஷ்யாவிற்குப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. இதிலிருந்தே ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் ஜம்பம் பலிக்க வில்லை யென்று தெரிகிறது.

சென்ற மார்ச்சு மாதம் 7-ம் தேதி மிஸ்டர் ஏ. வி. அலெக்சாண்டர், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் பலத்தைத் திட்டமிட்ட போது, 1943-ம் வருஷ ஆரம்பத்திலிருந்த அளவிற்கு இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் போராடிக் கொண்டிருக்கும் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. இதிலிருந்து ஜெர்மன் நீர் மூழ்கி கப்பல்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்று அர்த்தமல்ல, இன்னும் அநேகம் தயாராயிருக்கின்றன. ஒருக்கால் மேஜர் டோனெட்ஸ் ஒரு பெருந் தாக்குதலுக்கு அவற்றைச் சித்தப்படுத்திக் கொண்டிருக்கவுங் கூடும். இதற்கு நேச நாட்டினர் ஆயத்தமாகத் தான் இருக்கிறார்கள். ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் ஏராளமாகக் கிளம்பித் தாக்க முற்பட்டால், அதைச் சமாளித்து வெற்றி பெற, நேச நாட்டினர் ஆயத்தமா யிருக்கிறார்கள்.

---

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

தள்ள வேண்டியவற்றைத் தள்ளுவது ஒவ்வொருவரது கடமையும் ஆகும். அவ்வாறு தள்ள வேண்டியவற்றுள் பிரயாணம், குறிப்பாக ரெயில் வண்டிப் பிரயாணம் முக்கியமானது. இந்தப் பிரயாணச் சிக்கன விஷயத்தில் வெற்றி பெற, ஆண்களைக் காட்டிலும் பெண்கள் தான் அதிகத் தகுதி உடையவர்கள். எனவே, இந்தப் பிரயாணக் குறைப்புப் பணியில் ஈடுபடுமாறு என் சகோதரிகள் அனைவரையும் நான் மனப்பூர்வமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**எப்ரல் மாதம் 11-ம் தேதி சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட பேச்சு.**

# ஜப்பானேடு போராட அதிகக் கப்பல்கள்

கடற் படைப் போராட்டம் ஒரு இடத்திலிருந்து வேறிடத்திற்கு மாறுகிறது. ஆனால், நெருக்கடி அதிகமாக ஆக, கடற் படை யுத்த சரித்திரத்திலேயே, மகா கடுமையான போராட்டம் நடை பெறத் தக்க போர் முனையின் தன்மை, எளிதில் மனதில் பதியும். இந்தப் போர்முனை 12½ கோடி சதுர மைல் பரப்புடையது. இன்று உள்ள நிலைமையைக் கொண்டு அதை ஆராய்வோம்.

இந்து மகா சமுத்திரம் 2 கோடியே 83½ லட்சம் சதுர மைல். மலாக்கா ஜலசந்தியிலும் அதைச் சுற்றிலும், ஜப்பானியக் கப்பல்களோடு பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் போராடிக் கொண்டிருக்கின்றன. இந்து மகா சமுத்திரத்தில், கப்பற் படையின் பலம் மிகுந்து வருவதற்கு பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல்கள் அதிகமானது மட்டுந்தான் காரணமல்ல என்பதை, ஜப்பானியர்கள் நன்ருகத் தெரிந்துகொண்டு தான் இருக்கிருர்கள். தெற்காசியப் படைத் தலைவருக்கு, பலமான கப்பற் படைத் தேவை. இப்போதுள்ள பிரிட்டிஷ் கப்பற் படைக்கு இது உதவியா யிருக்கும். கடைசியாக இந்தக் கப்பல்கள், இப்போது ஜப்பானியர் வசமுள்ள நாடுகளில் நம் படைகளைக் கொண்டு போய் இறக்கும். தூரக் கிழக்கில் பிரிட்டிஷ் கப்பற் படையின் பலம் ஓங்கிக் கொண்டு வருகிறது. இது பற்றி, சமீபத்தில் நமது பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் செய்த தோர் ஒலி பெருக்குப் பிரசங்கத்தில். இந்து மகா சமுத்திரத்தில் ஒரு பலமான கப்பற் படை அட்மிரல் சோமர்வில் தலைமையில் அனுப்பப்பட்டிருக்கிற தென்றும், அமெரிக்கக் கப்பற் படைகளுக்கு ஆற்ருது ஜப்பானியக் கப்பற் படை மேற்கே திரும்புமானல், அதோடு சமர் செய்து சமாளிக்கும் பொருட்டே அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தார்.

**ஜெர்மனி கூறுவது**

இதற் கிடையில், ஜப்பானியக் கப்பற் பெரும் படை மேற்கே திரும்பினலும் திரும்பா விட்டாலும், ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல் போராட்டத்திற்கு, இந்து மகா சமுத்திரத்தில் பிரிட்டிஷ் படைகள் எப்பொழுதும் ஆயத்தமா யிருக்க வேண்டும். இந்து மகா சமுத்திரத்தில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களும் வேலை செய்து கொண்டிருப்பதாக ஜெர்மானியர்கள் கூறுகிருர்கள்.

பசிபிக் மகா சமுத்திரம் 63,686,000 சதுர மைல் பரப்புடையது. ஒரு வருஷத்திற்கு முன்பு, தான் எதிர்பார்த்ததை விட மிகவும் விரைவாகவே வெற்றி தனக்கு கிடைக்குமென்று மிஸ்டர் சர்ச்சில் நினைப்பதற்குக் காரணம், விமானந் தாங்கிக் கப்பல்களும், "லைட் க்ரூய்சர்"களும், நாசகாரிக் கப்பல்களும், போர்க் கப்பல்களும், குறிப்பாக "டாங்கர்களும்" ஜப்பானியருக்கு மிகக் குறைவா யிருப்பது தான். தமது பசிபிக் வெளி அரண்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாததோர் நிலைமையில் ஜப்பான் இருந்து கொண்டிருக்கிறது என்று ஆஸ்திரேலியப் படைகளும், அமெரிக்கப் படைகளும் மெய்ப்பித்து விட்டன. ஜப்பானியக் கப்பல் பலம் குறையக் குறைய, நேசநாடுகளின் கப்பல் பலம் பெருகுகிறது. தன் கப்பற் படையைச் சார்ந்த விமான பலத்தின் ஆதரவில் பெரும் படைகளை யனுப்ப ஜப்பானல் முடிய வில்லை. ஆனல், நேச நாட்டினரால் முடிகிறது.

மத்யதரைக் கடல் 1,145,000 சதுர மைல் பரப்புடையது. மத்தியக் கிழக்குக்கும், தூரக் கிழக்கு நாடுகளுக்கும் மத்திய தரைக் கடல் வழியாக நேர் முகமாக படைகளையும் தளவாடங்களையும் துணைக் கப்பல்களோடு அனுப்ப முடிகிறது. இதனல், ஒவ்வொரு கப்பலுக்கும் ஓட்டம் மிகவும் குறைகிறது. ஆகவே, வியாபாரக் கப்பல்கள் மிகுதியாகப் போய் வர முடிகிறது.

மத்திய தரைக் கடலில், ஜெர்மனியின் வேகமாகப் போகும் மோட்டார் போர்க் கப்பல்களிருக்கின்றன. இவற்றிற்கு "இ-படகுகள்" என்று பெயர். அங்கே சில ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களும் இருக்கின்றன. பிரான்சின் தென்கரை, வட இத்தாலி, கிரீஸ், க்ரீட், டொடிகனீஸ் ஆகிய பகுதிகளில் ஜெர்மன் விமானக் கூடங்கள் இருக்கின்றன. இந்த விமானக் கூடங்களிலிருந்து பொழுது பட்டவுடனே இவை நேச நாட்டு கப்பல்களைத் தாக்கலாம். சமீபத்தில் மத்தியதரைக் கடலில் நடை பெற்ற பெரும் போராட்டத்தில், பிரிட்டிஷ் கப்பல்கள் நஷ்டமாயின என்னும் செய்தியை லண்டனில் ரகசியமாக வைத்திருக்க வில்லை. அப்போது சில கப்பல்கள் பழுதுபட்டன. ஆனல் அதிர்ஷ்ட வசமாக, அப்படிப் பழுதான கப்பல்களெல்லாம் நேசநாடுகளின் துறைமுகங்களுக் கருகிலேயே தான் பழுதாயின. ஆகவே, உடனே அவற்றைத் துறைமுகங்களுக்கு கொண்டு வந்து சேர்த்துத் தற்காலிகமாகவாவது பழுது பார்க்க முடிந்தது. மத்தியதரைக் கடலில் நேச நாடுகளின் கப்பல் நடமாட்டம் மிகுதியா யிருப்பதனல் தான், மூழ்கிப் போன நம் கப்பல்களிலிருந்து தப்பியவர்களை மீட்க, அதிகச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறது.

அட்லாண்டிக் மகா சமுத்திரம் 31,530,000 சதுர மைல் பரப்புள்ளது. அங்கே நாள் தோறும், பிரிட்டிஷ் கப்பற் படையும் விமானப் படையும், நீர் மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் படையும் ஜெர்மன நீர் மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றன. தகுந்த துணைகளோடு போகும் நம் கப்பல்களைத் தாக்கும் விஷயத்தில், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் தலைவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவே தான் இருக்கிருர்கள். ஜெர்மானியாகள் பயமுறுத்திக் கொண்டிருந்த போதிலும், அட்லாண்டிக் போராட்டத்தின் போக்கை மாற்றத் தக்க வல்லமையுள்ள புதிய தளவாடங்களை, ஜெர்மானிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள் என்பதற்கான தோற்றங்கள் எதுவும் காணப் பட வில்லை.

# பிரிட்டனுக்குச் சீன பாராட்டு

சீன அன்னிய நாட்டுக் காரியாலயத்தின் பத்திரிகை "நாஷனல் ஹெராட்." சமீபத்தில் பிரிட்டனுக்குச் சென்று திரும்பிய சீன நல்லுறவுக் கோஷ்டியைக் குறித்து அது எழுதும் போது, ஒரு வருஷத்திற்கு முன்பு பிரிட்டிஷ் பார்லிமெண்டரி கோஷ்டி சீனவுக்கு விஜயம் செய்தது பற்றி குறிப்பிட்டது. அது எழுதியதாவது:—

"இந்த விஜயம் ஏற்கெனவே பலனளித்து விட்டது. அவர்கள் திரும்பிப் போனது முதல், தம் மக்களுக்கிடையே, நமக்கு என்னென்ன தேவை என்றும், வெற்றி பெறும் பொருட்டு, கடைசி வரைப் போராடியே தீருவதென்ற முடிவிற்கு நாம் வந்திருக்கிருேமென்றும் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அதன் பயனக, ஒரு நாளுமில்லாத அளவிற்கு நம்மிடம் அவர்களுக்கு அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது உணர்ந்திருப்பதைப் போல ஒரு போதும் நம் கஷ்ட நஷ்டங்களை அவர்கள் உணர்ந்ததில்லை."

தாம் பிரிட்டனைக் கண்டது பற்றி சீனக் கோஷ்டியர் என்ன கூறுகிருர்கள் என்று அப்பத்திரிகை எதிர் பார்க்கிறது. அது மேலும் கூறுவதாவது:—

"அவர்கள் கூறும் கருத்துக்களிலிருந்து, பிரிட்டிஷ் மக்கள், எவ்வளவு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாகி, அவற்றை வென்ருர்களென்றும், அவர்கள் தமக்காக மட்டு மன்றி, சுயேச்சையை முன்னிட்டும் மக்கள் இனத்தின் நன்மையை முன்னிட்டும் எவ்வளவு தியாகங்கள் செய்தார்களென்றும் நாம் அறிந்து கொள்ளலாம்."

மிஸ்டர் ஈடன் கூறியதை மேற்கோளாகக் கொண்டு அப்பத்திரிகை மேலும் எழுதியதாவது:—

"பிரிட்டிஷ் மக்களுக்கும் சீன மக்களுக்கும் பொதுவானவை பல உண்டு. இவ்விரு நாட்டாரும் இனி வருங் காலத்தில் ஒன்று பட்டு உழைப்பதைப் பொறுத்துப் பல விஷயங்கள் அமைந்திருக்கின்றன. இதே கருத்துத் தான் சீன மக்களும், சீன அரசாங்கமும் கொண்டிருப்பது. யுத்தத்தில் வெற்றி பெற வேண்டியிருக்கிறது. சமாதானம் ஏற்படும் போது, ஒன்றுபட்ட உழைப்பு மிகுதியும் வேண்டும். யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் தம் சிறந்த தோழர்களோடு ஒன்றுபட்டிருப்பதில் சீன மக்கள் பெருமித மடைகிருர்கள்" என்று அப்பத்திரிகைக் கடைசியாகக் கூறி முடித்தது.

## சிறு கதை

# பிரிந்த காதலர்களை சேர்த்தது ராணுவம்

(சென்னை ஏ. முருகேசம்)

வண்டலூர். அது ஒரு சிற்றூர். செங்கல்பட்டு ஜில்லாவை சேர்ந்தது. அவ்வூரில் கந்தசாமி கூலிவேலை செய்யும் ஓர் ஏழை. அவனுக்கு ஒரு மனைவியும், ஒரே ஒரு பையனும் உண்டு. மனைவியின் பெயர் வள்ளியம்மாள். பிள்ளையின் பெயர் குமரேசன். கந்தசாமி கூலிவேலை செய்து, வரும் அன்றாட வருவாயை அன்றன்றைக்கு செலவிடுவதற்கே மிகவும் கஷ்டமாக இருந்தது. ஏனென்றால் அவ்வளவு குறைவான கூலி. அதில் மூவரும் சாப்பிட்டு, தன் பிள்ளைக்கு வேண்டிய புத்தகங்களையும் வாங்கி கொடுத்து அவ்வூரிலுள்ள போர்டு ஸ்கூலில் படிக்கவிட்டு வந்தான். அவனும் அப்பள்ளியில் ஐந்தாவது வகுப்புத் தேறி விட்டான். அதற்கு மேல் அவ்வூரில் உயர் படிப்பு கிடையாது. கந்தசாமியும் கஷ்டப்பட்டு நமது பிள்ளையாகிலும் கொஞ்சம் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற அவா கொண்டு, பலரின் உதவியால் குமரேசனை தாம்பரத்திலுள்ள பள்ளியில் விட்டுப் படிக்க வைத்தான். அவ்விடத்திலும் அவனுடைய நற்காலம், ஒரு ஆண்டு கூட தவறாமல் பத்தாவது பாஸ் செய்து விட்டான். பின்னர் உத்தியோகத்திற்காக ரயில்வே ஆபீசுக்கு ஒரு மனுப் போட்டான். அதுவும் சீக்கிரத்தில் பலித்தது. அதாவது “ நீர் உடனே டிக்கட் செக்கர் வேலைக்கு வர வேண்டியது ” என்றிருந்தது. இதைக் கண்டதும், தன் தாய் தந்தையர்களிடம் விடை பெற்று, மறு நாள் சென்னை அடைந்து, ரயில்வே ஆபீசுக்கு சென்று, அவனுக்கு வந்த உத்தியோகக் கடிதத்தை ஆபீசரிடத்தில் நீட்டினதும், அவர் அவனுக்கு சென்னைக்கும்-திருவள்ளூருக்குப் போகும் ரயிலில் டிக்கட் செக்கர் வேலை கொடுத்தார். அதை அவனும் விடாது செய்து வந்தான். சம்பளமோ ரூ. 25. ஆனால் பஞ்சப்படி கொஞ்சம் வரும். இப் பணத்தில் அவன் சாப்பிட்டு, தன் தாய் தந்தையருக்கும் ரூ. 10 அனுப்பினான்.

குமரேசன் டிக்கட் செக்கராக இருக்கும் வண்டியில், நாள் தவறாது, ஒரு பெண், தூக்க முடியாத புத்தகங்களை தூக்கிக் கொண்டு கொரட்டூரிலிருந்து காலையில் சென்னைக்கு வருவதும், மாலையில் திரும்பிப் போவதுமாக இருந்தாள். மிகவும் அழகுடையவள். அவளை, அவன் அடிக்கடி சந்திப்பதுண்டு. டிக்கட்டு கேட்டால் அப்பெண் சீசன் டிக்கட்டைக் காண்பிப்பது வழக்கம். அவளிடத்தில் மறுபடியும் என்ன பேசுவது என்றுகூடத் தோன்றாது, மௌனமாக அவளையே உற்று நோக்கி விட்டு, தன் வேலையைத் தொடர்ந்து நடத்தச் சென்று விடுவான். ஆனால் அவன் மனதில் ஒன்று மட்டும் ஊசலாடிக் கொண்டே இருக்கும். அதை வெளியில் சொல்வதற்கும் அவன் நாவு இடம் தருவதில்லை.

குமரேசன் பார்க்கும் பார்வை, அப்பெண்ணையும் என்னவோ ஒன்றும் பதில் பேசாது மயங்க வைக்கும் பார்வையாக இருந்தது. இவர்களின் சிரித்த வதனத்தையே ஒருவருக்கொருவர் காண்பார்கள். இப்படியே இவர்களிருவருக்கும் காதல் கட்டம் ஆரம்பித்தது.

ஒரு நாள் கமலம்—ஆம் அது தான் அவ்வனிதையினுடைய பெயர்—குமரேசனைப் பார்த்து, “ இன்றைக்குத் தான் நம்முடைய கடைசி சந்திப்பு போல் தெரிகிறது. நானும் பரீட்சை முடித்து விட்டேன். மறுபடியும் என்னை வெளியில் அனுப்ப மாட்டார்கள் என் பெற்றோர்கள். உங்களை நினைக்கும்போது என் மனம் கலங்குகிறது. நம் காதல் இத்தோடு முடியட்டும். என்னை அறவே மறந்து விடுங்கள். நான் வருகிறேன் ” என்று குமரேசனுடைய இரு கரங்களையும் சேர்த்து, தன் இரு கண்ணீர் நிறைந்த கண்களிலும் ஒத்திக் கொண்டாள். குமரேசனும் என்ன பேச வேண்டும் என்று ஒன்றும் புரியாது பதுமை போல் அப்படியே அசைவற்று நின்று, கடைசியில் அவளை இறுக அணைத்து முத்தமிட்டு, “ இவை தான் எனது கடைசி முத்தம் போலும். நீ உன் வீட்டில் நின்ற பின் நானும் இவ்வேலையை விட்டு விடுகிறேன் ” என்று கூறி, இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே பிரிந்தார்கள்.

குமரேசன் தன் அறைக்கு வந்து இதே கவலையால் அன்றிரவெல்லாம் தூங்கவில்லை. என்னென்னவோ யோசித்தான். ஒன்றும் அவன் மனதிற்குத் தோன்றவில்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். ஆம் ! நம் தாய் நாட்டிற்கு பணி செய்து கிடப்பதே நம் கடன் என்ற உறுதி கொண்டான். எழுந்தான் அதிகாலையில். தன் காலைக் கடனை முடித்தான். புறப்பட்டான் புதுப்பேட்டை (யுத்தத்திற்கு ஆள் சேர்க்கும் இடம்). கண்டான் ரெக்ரூட்டிங் ஆபீசரை. “ நான் யுத்தத்தில் சேரப்போகிறேன் ” என்றான்.

“ நீர் எவ்வளவு வரையிலும் வாசித்திருக்கிறீர் ” என்று கேட்டார் ஆபீசர்.

“ நான் S.S.L.C. வரையிலும் வாசித்திருக்கிறேன் ” என்றான் குமரேசன்.

“S.S.L.C. பாஸ் செய்தீரா ? ”

“ ஆம் ! பாஸ் ஆகி விட்டேன்.”

“ மிக்க சந்தோஷம். உன் திறமையை கண்டும், தேக திடகாத்திரத்தைக் கண்டும், நான் உனக்கு விமான மோட்டும் (பைலட்) வேலை கொடுக்கிறேன். சம்மதமா ? ” என்றார் ஆபீசர்.

“ மிக்க வந்தன மய்யா ! அது கொடுத்தால் போதும் ” என்றான் குமரேசன். அப்படியே விமானப் பயிற்சி சாலைக்கு அனுப்பி வைத்தார். அவனும் மிக்க ஊக்கமாக ஆறு மாதத்தில் விமான மோட்டும் முழு வேலையும் கற்றுக் கொண்டான்.

ஒரு நாள் குமரேசன் விமானத்தை ஓட்டும் பொழுது, தான் கற்ற வேலைகளையெல்லாம் திறம்பட காண்பித்தான். பெரிய ராணுவ உத்தியோகஸ்தர்களெல்லாம் அவனுடைய வேலையைக் கண்டு, அவனைப் பாராட்டி ஒரு தங்கப் பதக்கமும் பரிசளித்தார்கள். அம்மாதிரியான பதக்கம் 100-ல் 5-பேருக்கு கிடைப்பது கூட மிகவும் கடினம். அப்படிப்பட்ட பதக்கம் பைலட் குமரேசனுக்கு கிடைத்தது.

இப்படியே தன் வாழ் நாட்களை கழித்து வருங் காலை, ஒரு நாள் ஒரு அவசரத் தந்தி அவ் விமான சாலைக்கு வந்தது. அதை படைத் தலைவர் படித்ததும், குமரேசனை கூப்பிட்டு “ இப்பொழுது நமக்கு வட பர்மாவில் விருந்து இருக்கிறது. அதை நாம் வயிறார உண்டு களிக்க வேண்டும். உடனே புறப்படுங்கள் ” என்று உத்தரவு பிறப்பித்தார். விமான மோட்டிகள் யாவரும் தெரிந்து கொண்டார்கள் அதன் இரகசியத்தை. உடனே புறப்பட்டன பதினாறு விமானங்கள். சென்றது வட பர்மா. சரமாரியாக பொழிந்தன குண்டுகளை. எதிரி ஜப்பான் விமானங்களை ஓட ஓட விரட்டி அடித்தார்கள் இந்திய விமானிகள். பிடித்தார்கள் அங்குள்ள இரண்டு முக்கிய நகரங்களை.

இவ் விமானச் சண்டையில் குமரேசனுக்கும் மற்றும் இதர சில சிப்பந்திகளுக்கும் சொற்ப காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் காரில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். அதில் குமரேசன் மட்டும், அடிபட்ட அதிர்ச்சியினால் மயக்க முற்றிருந்தான். அம்மயக்கத்தைத் தெளிவிக்க பல பெரிய டாக்டர்களெல்லாம் கூடி, வேண்டிய மருந்து கொடுத்துத் தெளிவித்து, அவனுக்கு வேண்டிய முதல் சிகிச்சையும் செய்யப்பட்டது.

மணி பகல் 12 இருக்கும். ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் யாவரும் அவரவர்களுக்கு வந்த சாப்பாட்டை வெகு சந்தோஷமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். குமரேசனுக்கு மட்டும் 12 அவுன்ஸ் ரொட்டியும், 4 அவுன்ஸ் வெண்ணெய்யும், அதற்குத் தகுந்த சர்க்கரையும் காலை 8-மணிக்கே கொடுத்து விட்டார்கள். குமரேசன் அதைக் காலையிலும், மத்தியானத்திலும் சாப்பிட வேண்டியது. அவன் மயக்க முற்றிருந்ததனால் சாப்பாடு கொடுக்கவில்லை. அதற்குப் பதில் தான், ரொட்டி வெண்ணெய் கொடுத்தார்கள். அதை பகல் 12-மணிக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு நர்ஸ் கையில் அவுன்ஸ் கிளாசில் மருந்து எடுத்துக் கொண்டு நேராக அவனிடம் அணுகினாள். அம்மாதைப் பார்த்ததும், தன் இரு கண்களையும் அவன் நம்பவில்லை,

(11-ம் பக்கம் பார்க்க)

# அடிப்பதிலே போட்டி!

**ஊ**ரிலே ஒரு பெரிய திருட்டு நடந்து விட்டது. அதிலே சம்மந்தப்பட்டவர்கள் யார் என்று தெரிந்து விட்டது. அவர்களைக் கண்டு பிடித்துக் கொண்டு வர ஊரில் உள்ள பெரிய மனுஷர்கள் எல்லாம் ஒன்று கூடினார்கள். திட்டம் போட்டார்கள், அந்தத் திட்டப்படியே எல்லாம் நடந்தது. திருடர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். அப்புறம் அவர்கள் தப்பியோட முயன்றார்கள். அப்பொழுது, ஊராரில் நாலுபேர்கள் நாலு பூசை கொடுக்க முயன்றிருப்பார்களா, மாட்டார்களா? அப்புறமானால் சான்ஸ் போய்விடும் என்று நான், நீ என முந்திக்கொண்டு அடித்திருக்கமாட்டார்களா?

## சமாதானத்தை திருடியவன்

இதே போலத் தான், உலக சமாதானத்தை திருடின ஹிட்லரைத் தலைவராகக் கொண்ட அச்சு நாடுகள், இதைப் பார்த்து, இந்த அச்சு நாடுகளை அமுக்க நேச நாடுகள் ஒன்று கூடின. திட்டங்கள் போட்டன. அவை அமுல்படுத்தப் படுகின்றன. அச்சு நாடுகளில் பெரிய தலையான ஜெர்மனியையும், இத்தாலியையும் நேரிலேயே போய் அடிக்க நேச நாடுகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. நேசநாடுகள் பக்கத்திலே, நிகரற்ற சக்தி வாய்ந்த ருஷ்யர்களும் சேர்ந்தனர். சும்மா தூங்கிக் கொண்டிருந்த கரடியின் காதிலே குச்சியைக் கொண்டு குத்தியது போல் ஜெர்மனி ருஷ்யா மீது கை வைத்தது. உடனே கரடி துள்ளி எழுந்தது. ஜெர்மனியை பளீர், பளீர் என்று அறைந்து கொண்டிருக்கிறது இந்தக் கன்னத்திலும், அந்தக் கன்னத்திலுமாக. இப்பொழுது ஜெர்மனியை மேற்கிலிருந்து பிரிட்டிஷ், கானடிய, அமெரிக்கப் படைகள் தாக்கக் காத்திருக்கின்றன. மேற்கண்ட படைகளுக்கு முன் கூட்டியே வேண்டிய சௌகரியங்களைச் செய்து வைக்க, வேகமாகச் செல்லும் விமானிகள் ஜெர்மனியிலும், ஜெர்மனியின் பிடியில் அகப்பட்ட நாடுகளிலும் உள்ள தொழிற்சாலைகளை பொடியாக்கி வருகிறார்கள். இவ்வாறு ஜெர்மனியை அறைவதிலேயே, பலமான போட்டி ஏற்பட்டிருக்கிறது.

## போட்டா போட்டி

ஒரு நாள் 2,000 அமெரிக்க விமானங்கள் கிளம்பிப் போய் ஜெர்மனியின் கீழ் கோடி வரை பறந்து செல்லுகின்றன. பல்லாயிரம் டன் கணக்கான குண்டுகளை மழையாகப் பெய்து விட்டு வருகின்றன. இன்னொரு நாள், பிரிட்டிஷ் விமானிகள் தங்கள் விமானங்களில் கிளம்புகிறார்கள். பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய பிரதேசங்களில் யுத்த சாமான்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளாகப் பார்த்து குண்டுகளை அக்ஷதைபோல் தூவி விட்டு வருகிறார்கள். பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகளில் யார் சமர்த்தர்கள் என்பதைத் திட்டமாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த இரு நாட்டினராலும் ஜெர்மானியருக்கு ஏக அவஸ்தை தான்.

## கூடிய சீக்கிரமே?

ஆகாயத்திலிருந்து மட்டும் இப்பொழுது அவஸ்தைகள் குதித்துக் கொண்டிருக்கின்றன. கூடிய சீக்கிரமே மேற்குத் திசையிலிருந்தும் ஜெர்மானியருக்கு ஆபத்து வரக் காத்திருக்கிறது. எவ்வளவு வெடி குண்டுகள் வீசிய போதிலும், ஜெர்மனியின் உற்பத்தி சக்தியைப் பூரணமாகக் குலைக்க முடியவில்லை. ஜெர்மனியிடம் நிறைய யுத்த சாமான்களைச் செய்வதற்கான ஆயுதங்களிருக்கின்றன. அவற்றை அது போர்ச்சுகல் தேசத்திற்குக் கொடுக்கச் சித்தமாக இருக்கிறது. எதிர் காலத்தில் வரப்போகும் இடைஞ்சல்களை உணர்ந்து ஹிட்லர் மேற்கு ஐரோப்பாவிலே, கடற்கரையிலிருந்து 30 மைல் தூரம் வரை நெடுக வீரர்கள் குவித்திருக்கிறாராம். ஜெர்மனி யுத்தத்திலிறங்கிய போது, அதனிடம் ஐம்பது லக்ஷம் போகள் இருந்தார்களாம். இப்பொழுதோ கிட்டத் தட்ட எழுபத்து மூன்றே கால் லக்ஷம் பேர்களிருக்கிறார்களாம். சண்டையிடும் விமானங்களும் முந்தியிருந்ததைப் போல் மூன்றத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது. ருஷ்யாவிலே சண்டை போடுவதற்கு உபயோகப் படுத்தப்படும் விமானங்கள் எல்லாம் சமுத்திரத்திலே கரைக்கப்படும் பெருங்காயம் போல, எல்லாம் வீண். ருஷ்யர்கள் புயல் போல, அசல் ஜெர்மனியிலேயே கை வைக்க வந்து விடுவார்கள் போலிருக்கிறது. ஆகவே, ஜெர்மனியைக் காக்க விமானங்கள் நிறைய வேண்டும் என்றெண்ணியே, போராடும் விமானங்களை ஜெர்மனியிலே நிறையத் தயாரிக்கச் செய்திருக்கிறார் போலிருக்கிறது ஹிட்லர்.

தான் தோற்றுப் போவது நிச்சயம் என்பது அவருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கிறது என்பது, இதிலிருந்து ருஜுவாகிறது. வெடிகுண்டு வீசும் விமானங்களை நிறையத் தயாரிக்கச் சொல்லுகிறார் என்றால், ஏதோ படையெடுப்பிற்கான ஏற்பாடு என்று எண்ண வேண்டும். ஆனால் சண்டை போடும் விமானங்களே அதிகமாகத் தயாரிக்கப் படுவதால், தன் உடலைக் காக்கும் யோசனையோ பிரதானமாக ஆகி விட்டது என்பது ஊர்ஜிதமாகிறதல்லவா?

## நம் கைங்கரியம்

சென்ற மூன்று மாதங்களில் மட்டும் நேச தேசத்தாரின் கைங்கரியமாக 53 ஆயிரம் டன் வெடி குண்டுகள் ஜெர்மனிக்கு வரும்படி. இம்மாதிரியான வரும்படியை ஜெர்மனி எதிர்பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை. நேச தேசத்தார் தாராளமாக, அள்ளி அள்ளி விடுகிறார்கள். "ஐயோ! வேண்டாமே! வேண்டாமே!" என்று ஜெர்மன் மக்கள் அலறுவார்கள். அவாகளது ஓலம் வெளி உலகிற்கு இப்பொழுது எட்டுமா என்ன?

## கதை மாறுகிறது

கதையே இப்பொழுது மாறிக் கொண்டிருக்கிறது. நேசதேசங்களுக் கருகிலும் தாங்கள் நினைத்த இடங்களிலும் ஜெர்மானியர் யுத்த ஆரம்பத்தில் சுரங்க வெடிகளைப் போட்டுக கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ அந்தக் காரியத்தை நேச தேச விமானிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஹாலந்து, டென்மார்க், நார்வே அருகில் எல்லாம் சுரங்க வெடிகள் மிதக்க விடப்படுகின்றன. அவ்றறை நாவிகள் அள்ளி எடுத்துக கொண்டிருக்கிறார்கள். நேச தேச குண்டு விமானங்களில் பத்தில் ஒரு பங்கு இந்தக் காரியத்திலீடுபட்டிருக்கிறதாம். ஜெர்மானியருக்கு சகல வழிகளிலும் சர்வாவஸ்தை தான்! பட்டுத் தானாக வேண்டும். தப்ப முடியாது.

"வசந்த காலம் பாதியாகி விட்டதே! இன்னும் இரண்டாவது போர் முனையைக் காணோமே!" என்று பலர் கேட்கக் கூடும். தோட்டத்திலே மாடு இறங்கி மேய்கிறது என்பது தெரிந்ததும், தடியெடுத்துக் கொண்டுபோய் நாலு சாத்து சாத்துவது மாதிரியல்ல ஜெர்மானியரை அடிப்பது. முன் வைத்த காலைப் பின் வைக்கவே கூடாது. அடித்தால் சரியானபடி அடிக்க வேண்டும். அதோடு இடுப் பெலும்பு ஒடிய வேண்டும். அதற்கப்புறம் ஆள் நடமாட்டமே இருக்கப் படாது. ஆகவே, நிதானமாகத் தான் நடக்கும் காரியம்.

## சூர்யோதயம் போல!

இரண்டாவது போர் முனை ஏற்படப் போவது என்னமோ, விடிந்தால் சூரியன் உதயமாவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம். அதற்கான ஏற்பாடுகள் கமுக்கமாக நடந்து கொண்டுதானிருக்கின்றன. அயர்லாந்தில் உள்ள ஜெர்மானிய ஜப்பானிய ஸ்தானிகர்களுக்கு சீமையில் நடக்கும் தகவல்கள் எதும் எட்டாதபடி செய்தார்கள் முதலிலே. திடுதிப் பென்று முன்னெச்சரிக்கை யின்றியே ரயில்கள் நிறுத்தப்படும் என்றார்கள். இங்கிலாந்தின் கீழ்க் கரையோரத்தைப் பலப்படுத்தி, அங்கு ஆள் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தினார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பாக, பிரிட்டனில் உள்ள அந்நிய நாட்டுத் தூதர்களை பிரிட்டனிலேயே தங்கியிருக்க வேண்டுமென்றும், அவர்கள் பரிபாஷையில் எங்கும் தந்திகள் அனுப்பக் கூடாதென்றும், அவர்களது தபால்கள் தணிக்கை செய்யப்படுமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்திரவு போட்டு விட்டார்கள். பின்னால் வரும் யானைக்கான மணி யோசை இது. இதற்குச் சந்தேகமே யில்லை.

## பறந்து பறந்து!

ருஷ்யர்கள் ருமேனியாவிற்குள்ளும், செக்கோஸ்லோவேகியாவிற்குள்ளும் புகுந்து விட்டார்களே! போலந்திலும் போர் நடக்கிறதே! கிரைமியாவிலே அவர்கள் நாஜிகளை நாற அடித்து விட்டார்களே! போலீஸாரைக் கண்ட திருடர்கள் போல ருஷ்ய வீரர்கள் ஊர் வாசற்படியில் காலை வைத்ததும், ஜெர்மானியர் கொல்லை வழியாக நழுவி ஓடுவதாக இருக்கிறது. செபாஸ்டபோல் என்ற துறைமுகத்தை

முன்பு நாஜிகள் சுட்டெரித்தார்கள். ஆனாலும் வீர ருஷ்யர்கள் அதனை அட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். பல நாட்கள் பயங்கரமான போர் நடந்தது. ஜெர்மானியருக்கும் ஏக நஷ்டம். அப்புறமே செபாஸடபோலை ருஷ்யர்கள் காலி செய்தனர். அப்படிப் பட்ட இடத்தை நாஜிகள் வெகு நாட்கள் பிடித்துக் கொண்டிருப்பார்கள் என்று தோன்றவில்லை. ருஷ்யர்கள் நாலா பககங்களிலும் பறந்து பறந்து வந்து அமுக்கி விடுகிறார்கள் அயோக்ய நாஜிகளை. ஒன்று சரணடையலாம்; இல்லா விட்டால் சாகலாம். இந்த இரண்டு வழிகளைத் தவிர, நாஜிகளுக்கு வேறே விதியே இல்லை.

**மூட்டை விஷயம்**

ராத்திரி வேளைகளில் மூட்டைப் பூச்சிகள் படுக்கையிலே வந்து குவியும். தூங்குகிற ஆசாமி வெகு தூரம் பிரயாணம் செய்து விட்டோ, ரொம்ப வேலை செய்து விட்டோ வந்திருந்தால் அலுப்பாகத் தூங்குவது இயற்கை. மூட்டைகள் எல்லாம் உத்சாகத்தோடு அவரது தேகமெங்கும் ஏறி, ஆவலோடு அவரது ரத்த முழுவதையும் உருஞ்சிச் சாப்பிட நினைப்பது போல் வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு குந்து மணிகள் மாதிரி ஆகிவிடும்.

தூங்குகிற ஆசாமிக்கு விழிப்பே இல்லாமலா போய்விடும்? அவர் எப்பொழுதாவது விழிக்கத் தானே செய்வார்? அது வரை தூக்கக் கண்ணுடனேயே, மூட்டைகள் கடிக்கும் இடங்களைச் சொரிந்து விட்டுக் கொண்டே யிருந்தவர், விழிப்பு வந்ததும் துள்ளி எழுந்து, விளக்கை சட்டென ஏற்றுவார். அபபொழுது பார்த்தால், தலையணை, வேஷ்டி, படுக்கை யெங்கும் ஒரே மூட்டைப் பட்டாளமாகவே இருக்கும். சில மூட்டைகள் அதி வேகமாகப் பின் வாங்கி, சுவர்களில் ஏறி ஓடிக் கொண்டிருக்கும். தூங்கி விழித்தவர், ‘அப்படியா செய்தி! இருங்கள் உங்களை!’ என்று நெருப்புப் பந்தத்தைக் கொளுத்தி சுவர்களருகே நீட்டுவார். மூட்டைகள் ‘பொத், பொத்’ என்று சுட்டு விழும். படுக்கையில் உள்ள பட்டாளங்களைப் பிடித்து ஹரிக்கேன் லாந்தர் மீது வைப்பார் கடி பட்டவர். மூட்டைகள் அப்படியே வறுகலாகி விடும். வேறு சிலவற்றைப் பிடித்து கொட்டாங்கச்சி ஜலத்தில் போடுவார்கள். கொஞ்ச நேரம் ஜலவாசம் செய்து விட்டு அந்த மூட்டைகள் ‘கயா’ ஆகும். எல்லா மூட்டைகளையும் பிடித் தொழித்து விட்டு, சந்தேகத்திற்கு படுக்கை, தலையணை, போர்வை, வேஷ்டி எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டி ஆயிரம் தடவை பார்த்த பின்னரே, அந்த ஆசாமி திரும்பவும் தூங்கப் போவார். தூக்கம் கெடத் தான் கெடும். அதற்கென்ன செய்வது?

**ஜெர்மானிய மூட்டைப் பூச்சிகள்**

இதே போல, ஜெர்மானிய மூட்டைகள் ருஷ்ய உடலிலிருந்து ரத்தத்தை உருஞ்ச முயன்றன. ருஷ்யா விழித்துக் கொண்டு விட்டது. ஆகவே, மூட்டைகள் பல விதங்களிலும் த்வம்சம் செய்யப்படுகின்றன. எல்லா மூட்டைகளையும் ஒழிக்கும் வரை ருஷ்யா படுக்கப் போகாது.

அவ்வாறு செய்யும் நோக்கத்துடன் தான் ருஷ்யர்கள் மடமடவென பெரிய ‘ஸ்கேலில்’ போரை நடத்துகிறார்கள். சீக்கிரமே போரை முடிக்க வேண்டுமென்பது தான் அவர்களுடைய ஆசை. அவர்கள் பக்கம் விஜய தேவதை கண் திறந்து பார்த்திருக்கிறாள். க்ரைமியாப் போர முடிந்து விட்டால், ருஷ்யப் போரே முடிந்தது மாதிரி தான். அப்புறம் ஜெர்மன் போர் ஆரம்பமாக வேண்டியது தான்.

**ருமேனியாவிலே!**

ருமேனிய மண்ணில் கடும் போர் நடக்கிறது. ருமேனிய எண்ணெய் வயல்களைத் தாக்க ருஷ்யர்கள் நினைத்திருக்கிறார்கள். அவற்றைக காக்க நாஜிகள் நினைத்திருக்கிறார்கள். அங்கிருந்த ருமேனியப் படைகளை அனுப்பி விட்டு, ஜெர்மன் படைகள் அவ்விடங்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. அந்த வயல்களை ருஷ்ய விமானங்களும், நேச தேச விமானங்களும் குண்டுகளைக் கொண்டு தாக்கி வருகின்றன. ருமேனியர்கள் யுத்தம் என்றால் என்ன என்பதை நன்றாக உணர்ந்து வருகிறார்களாம். ருஷ்யர்கள் பிடிக்கும் இடங்களில் உள்ள ருமேனியர்கள் ருஷ்யர்களை நேசிக்கத் தொடங்கி விட்டார்களாம். ‘முதலில் உங்கள் மீது வெறுப்பு இருந்தது வாஸ்தவம். ஆனால் உங்களுடைய நோக்கம் இப்பொழுது தான் எங்களுக்குத் தெரிகிறது. நீங்கள் வந்திருப்பது ரொம்ப சந்தோஷம்’ என்கிறார்களாம் அவர்கள்.

**ருஷ்யர் நோக்கம்**

“எங்களுக்கு இருப்பதே போதுமய்யா! இந்தப் புது நாடுகளைப் பிடிக்கும் யோசனையே எங்களுக்கில்லை. எங்கள் நாட்டிற்கு எங்கிருந்தும் இனி ஆபத்து வரக் கூடாது. இருபது வருடங்களுக்கொரு தடவை இதே மாதிரி வழக்கமாக ‘நியூசென்ஸ்’ ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாங்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. 1918 ஆச்சு, 1941 ஆச்சு, இனி 1960-ல் ஒரு யுத்தம் என்றால், சகிக்க முடியாது. போக்கிரித்தனமாக எங்கள் நாட்டின் நிம்மதியைக் குலைத்த இந்த ஜெர்மன் மிருகத்தை கை வேறு, கால் வேறாகக் கிழித்து சக்தியற்றுப் போகும்படி செய்த பிறகே நாங்கள் போரை நிறுத்துவோம். நேரே ஜெர்மனியின் ஹ்ருதயம் போன்ற பெர்லினுக்கே போவோம். இடையில் உள்ள நாடுகளைப் பிடித்து, அவற்றிற்கு யுத்தத்திற்கு முந்தி இருந்த அந்தஸ்தை யளிப்போம்” என்கிறார்கள் ருஷ்யர்கள்.

மழை, பனி யெல்லாம் அநேகமாகத் தீர்ந்து விட்டது. தரை கெட்டியாகி விட்டது. இனி தடதட வென ருஷ்யப் படைகள் முன்னேறலாம்.

ருஷ்யர்கள் மேற்கே போகப் போக, ஜெர்மானியர்கள் நெருக்கப்படுவதுபோலாகிறார்கள். நல்ல சமயத்திலே நேச தேசப் படைகள் மேற்கே வந்திறங்கினால், ஜெர்மானியர் சட்ணியாவது திண்ணம். அதற்கப்புறம் ஜெர்மானியர் என்ன செய்வார்கள்? ஹிட்லரைக் கேட்டால் அல்லவா இது தெரியும்! அவர் தமது சகாக்களை யழைத்து ரொம்ப முக்கியமான அரசியல், ராணுவ சமாச்சாரங்களை யெல்லாம் பேசியிருக்கிறாராம். அசல் ஜெர்மன் போர் ரொம்ப பயங்கரமாக இருக்கப் போகிறது என்பதில் சந்தேகமே இல்லை. நேச தேசத்தார் மேற்கே இருந்து மட்டும் பாயப் போகிறார்களா, சகல திசைகளிலும் வந்திறங்குவார்களா என்பதும் தெரியவில்லை.

**இத்தாலியிலே!**

இத்தாலியிலே ஒரே ஓய்வாக இருக்கிறது. இரு கட்சியினரும் பேசாதிருக்கிறார்கள். நடு நடுவே, நாஜிகள் பீரங்கிகளைக் கொண்டு அன்ஸியோ கடற் கரையைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ரொம்ப சிரமமாக இருந்த போதிலும், நேச தேசப் படையினர் தாங்கள் பிடித்த இடத்தைக் குரங்குப் பிடியாக பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ‘ஆனால், ரோமை விட்டு வடக்கே போக எந்த நிமிஷத்திலும் சித்தமாக இருக்கவேண்டும்’ என்று ஒரு ஜெர்மன் அறிக்கை ‘மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான்’ என்றதுபோல் வெளியிடப்பட்டிருக்கிறதாம். இதன் தாத்பரியம் என்னவென்று புரியவில்லை. இன்னும் சில தினங்கள் போனால் புரிந்துவிடுகிறது. ரோமைக் காலி செய்யப் போகிறார்களா? அல்லது வடக்கே படையெடுப்பு இருக்குமா? போகப் போகப் புரியும்.

**குள்ளன் விஷயம்**

ஜெர்மனியை ஒழிக்கும் வேலை ஒரு புறம் நடந்துகொண்டிருக்க, மற்றொரு கொடிய எதிரியான ஜப்பானையும் இப்பொழுதே கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். 1941 டிஸம்பரில் ஆரம்பமான சண்டை சுமார் 28 மாதங்களாக நடந்தாகிவிட்டது. இந்தக் காலத்திற்குள் ஜப்பானியரின் குணாதிசயங்களை நேச தேசத்தவர் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ‘ஜப்பானியனை குப் என்று அமுக்கிப் பிடித்து, அடித்துத் தொலைத்து விட வேண்டும். அவனுக்கு அவகாசம் கொடுத்துவிட்டால், அந்த இடத்திலேயே குழி தோண்டிக் கொண்டு, காலைப் பத்திரமாக ஊன்றிக் கொண்டு விடுவான் அவன்’ என்பதை நேசதேசத்தவர்கள் கண்டுகொண்டு விட்டார்கள்.

**நல்ல அசடுகள்!**

ஜப்பானியருக்கு யாரோ சொல்லியிருக்கிறார்களாம், இந்தப் போரில் கைதியாகப் பிடிபடாது போராடிக் கொண்டே செத்தால், பிறகு சொர்க்கத்திலே பீப்பாய் பீப்பாயாக விஸ்கி கிடைக்கும் என்று. அதனால்தான் ஜப்பானியர் கண்மூடித்தனமாக, வெறி பிடித்தவர்கள்போலப் போராடுகிறார்கள் போலிருக்கிறது. நல்ல அசடுகள்!

பஸிபிக் மகா சமுத்திரத்திலே மெள்ள மெள்ள அமெரிக்கப் படைகள் ஜப்பானியர் வசமிருந்த தீவுகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக் கொண்டு வருகின்றன. ட்ரக் துறைமுகத்திலே குண்டுகள் பிரமாதமாக வெடித் துக் கொண்டிருக்கின்றன. அதைப் பிடித்துக் கொள்வது, அப்புறம் சீனக் கடற்கரையை அடைவது. ஜப்பானியக் கடற்படையைச் சண்டைக் கிழுத்து ஒழித்துவிடுவது என்று அமெரிக்கர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களாம். பேஷான திட்டம் தான்!

ஜப்பானியக் கடற்படை சும்மா ' டிமிக் ' கொடுத்துக்கொண்டே யிருக்கிறது. இது வரை எங்கும் அது சரியானபடி சண்டை போட வெளியில் வரவே இல்லை. இப்பொழுது அது சிங்கப்பூருக்கு வந்திருக்கக் கூடும் என்கிறார்கள்.

இந்தப் பெரிய படையை வைத்துக் கொண்டு, ஜப்பானியர் இந்தியாவிடம் வாலாட்டக் கூடும் என்று எதிர்பார்த்தே, லூயி மவுண்ட்பாட்டன் பிரபு இந்தியாவிற்கருகில் உள்ள சமுத்திரங்களில் பிரமாண்டமான தொரு கப்பற் படையைக் கொண்டு வைத்திருக்கிறாராம். சென்ற சில மாதங்களாக, அவர் தமது சிப்பந்திகளுடன் புது டில்லியில் பங்காவிற்கடியில் ஹாயாக உட்கார்ந்து, பிளான்கள் போட்டுக் கொண்டிருந்தார். இந்தியாவின் நிலைமையை அறிந்தார். இப்பொழுது இலங்கைக்குப் போய்விட்டார் ஆபீஸோடு. அங்கிருந்தே, ஜப்பான் மீது போர் நடத்துவாராம். இலங்கை இனி உலகோரின் திருஷ்டியில் சதா இருக்கும்.

**இலங்கைப் பயணமேன் ?**

இதென்ன இது ? 'தென்னை மரத்தில் தேள் கொட்டியிருக்கிறது, பனை மரத்திற்குப் போய் மந்திரிக்கிறார்களே ?' என்று கேட்பீர்கள், ஜப்பானியர்கள் மணிபுரி சமஸ்தானத்திலே புகுந்து, இம்பால், கோஹிமா ஆகிய இடங்களைப் பிடிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். இம்பாலிலிருந்து ஸில்ச்சார் போகும் பிரதேசத்திலும், வடக்கே கோஹிமாவிலிருந்து திமாபூர் போகும் வழியிலும், இம்பால் சம வெளிகளிலும் போர் நடக்கிறது. அவர்களை உதைத்து விரட்டாது, இலங்கைக்கு ஓடுகிறாரே ?' என்று விஷய மறியாதவர்கள் கேட்கக்கூடும்.

டில்லியிலிருந்து மணிபுரி போரை நடத்துவதுபோலவே, இலங்கையிலிருந்தும் நடத்தலாம். டில்லியிலிருந்து பறந்து மணிபுரி போகும் நேரத்தைவிட, கூட இரண்டுமணி நேரமாகப் போகிறது இலங்கையிலிருந்து வர. தவிர, கூடிய சீக்கிரமே மழை காலம் வரப்போகிறது. அஸ்ஸாம் எல்லையில் அதிகப்படியாகப் போரை நடத்த முடியாது. நாமாவது சம வெளியிலிருந்து உதவி அனுப்புகிறோம். சமீபத்திலே ரயிலும் இருக்கிறது. ஆனால் ஜப்பானியருக்கோ, மலைகள் வழியாகவே உதவி வரவேணும். மலைகளில் எங்கும் வெள்ளமயமாக இருக்கும். அவர்களுக்கு உதவி வருவது தடைப்படும். ஆகவே, இலங்கையிலிருந்து, கடற் போரை சௌகரியமாக நடத்தலாம் என்று மவுண்ட்பாட்டன் பிரபு போயிருக்கக்கூடும்.

**இந்தியா அருகில் போர்**

ஜப்பானியப் போரும் கடுமையாகவே இருக்கும். ஏனென்றால், விஷயமறிந்தவர் ஒருவர் சொல்லுகிறார் : இதுவரை ஜப்பானின் ராணுவத்தில் இருபதில் ஒரு பங்கினர் தான் சாக்ஷாத்தாகப் போராட வந்திருக்கின்றதாம். ஜப்பானின் ராணுவமும் அதிகம் பழுதுபடாதிருக்கிறது. எப்படிப்போனாலும் கடல்வழியாகவே ஜப்பானைப் போயடையவேண்டும். ஆகவே, போர் நீடித்தே நடக்கலாம். கூடியவரை அதை குறுக்கவே நேசதேசத்தார் முயல்வார்கள். ஜெர்மனி தோற்கும்வரை, இங்கே யாரும் சும்மாயிருக்கப் போவதில்லை. இந்தியாவிற்கு வெகு தொலைவிற்கு அவர்கள் ஓட்டப்படுவார்கள். இந்திய வீரர்கள் தங்கள் சமர்த்தை உலகோருக்கு வெளிக்காட்ட, பல அரிய சந்தர்ப்பங்கள் வரப்போகின்றன. இந்தியாவிற்கு வெகு சமீபமாகவே யுத்தம் நடக்கப் போகிறது. இதுவே கடைசிப் போராகவும் இருக்கலாம். ஜப்பானின் சூது வேலைகள் இனி செல்லா. போனவாரம் கூட, அமெரிக்க வெளி நாட்டு இலாகா ஜப்பானின் வண்டவாளத்தை எடுத்து வெளியில் விட்டிருக்கிறது. 15 வருடங்களுக்கு முன்பே ஜப்பான் ஒரு தகடுதத்தவேலை செய்தது. யுத்தம் கூடாதென வற்புறுத்தும் கெல்லாக் உடன்படிக்கையிலே, பிரிட்டனும் அமெரிக்காவும் கையெழுத்திட்டன. புதிதாக எந்தக் கடற்படை தளத்தையும், நிலப்படைகளையும் அமைப்பதில்லை ; படைகளையும் பெருக்குவதில்லை என்று அந் நாடுகள் தெரிவித்துக் கொண்டன. அதன்படி நடக்கவும் செய்தன. ஆனால் அப்பொழுதே ஜப்பான் மட்டும், தனது சக்ரவர்த்தியின் கையெழுத்தையே அதில் நாட்டச் சம்மதித்தது. தேச மக்கள் சார்பிலே யாரும் வாக்களிக்க முடியாதென்றது. அப்பொழுது ஜப்பானின் வார்த்தைகளின் கள்ளார்த்தத்தை யாரும் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. அதுதான் தவறாகப் போச்சு ! அதை இப்பொழுது சரிப்படுத்திவிட்டால், போச்சு ! கொஞ்சம் கஷ்டமான வேலைதான். என்னசெய்வது. செய்தாகவேணுமே !

---

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

மறுபடியும் கண்களை தேய்த்துக் கொண்டு உற்றுப் பார்த்தான். ஆம் ! அவள் தான். இல்லை ! நான் நினைப்பது கனவா அல்லது நினைவா, என்று மனதில் நினைத்தபடி அந் நர்ஸை உற்று நோக்கியபடியே "கமலா" என்று வாய் விட்டுக் கத்தினான். "நீ கமலாவா" என்றதும் "ஆம் ! நான் தான் கமலா, என் பெயர் தான் கமலா" என்று அவளுடைய கண்களை அவளே நம்பாது, மறுபடியும் தேய்த்துப் பார்த்து, "ஆம் ! நீ குமரேசன் தான் ! என்னருமைக் காதலர் தான். சந்தேகமில்லை. நம்மிருவரும் பிரிந்திருந்ததை ஒன்று சேர்த்து இந்த ராணுவ உத்தியோகம் தான்" என்று மெதுவாக பேசிக் கொண்டார்களே ஒழிய, பக்கத்திலுள்ள யாருக்கும் இந்த சம்பாஷணை கேட்க வில்லை. பிறகு, கையில் கொண்டு வந்த மருந்தை அவன் வாயில் ஊற்றி விட்டு போய் விட்டாள். அவள் போனதிலிருந்து இவள் எப்படி இவ் வேலைக்கு வந்தாள் என்று சிந்தித்துக் கொண்டே இருந்தான்.

மாலை மணி 5 ஆனது. மெதுவாக எழுந்து வெளி வராண்டாவிலுள்ள பெஞ்சியின் மேல் மெதுவாகப் போய் உட்கார்ந்தான். அங்கு ரேடியோ பாடிக் கொண்டிருந்தது. அதை ஆனந்தத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு கமலம் (நர்ஸ்) வந்து "ஏது ! பாட்டிலேயே லயித்து ஆழ்ந்திருக் கிறீர்களே !" என்றதும், குமரேசன் திடுக்கிட்டுத் திரும்பி பார்த்தான். நின்றிருப்பது கமலம் (நர்ஸ்) என்று தெரிந்து கொண்டு தன் பக்கத்திலுள்ள இடத்தைக் "உட்கார் கமலா"! என்றான். அவள் உட்கார்ந்ததும், "நீ எப்படி இவ் வேலைக்கு இந்த ஊருக்கு வந்தாய்" என்று தன் மனதில் குடிக் கொண்டிருந்த கேள்வியை கேட்டான்.

நான் எனது S.S.L.C. பரீட்சை முடித்ததும் வீட்டில் ஒரு மாதம் இருந்தேன். என் எண்ண மெல்லாம் உன்னையே நாடி இருந்தது. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படுவதைப் போல் நான் நினைத்து, பின் அவ்வெண்ணத்தை மறந்து விட்டேன். எனக்கு யுத்தத்தில் சேர்ந்து பணி செய்ய வேண்டு மென்ற எண்ணம் வந்தது. எனது பெற்றோர்களிடத்தில் இந்த எண்ணத்தைச் சொல்லி, 'நான் நர்ஸ் வேலைக்கு போகப் போகிறேன்,' என்றேன். அவர்களும் ஒன்றும் பேசாது ஒருவாறு ஒத்துக்கொண்டார்கள்.

நானும் ராணுவத்தில் நர்ஸாக சேர்ந்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஆறு மாதம் பயிற்சி பெற்றேன். பின் இந்த ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு இன்றைக்கு இரண்டு நாட்களாகிறது. என்று முடித்து, "நீ எப்படி ராணுவத்தில் சேர்ந்தாய்" என்று கேட்டாள்.

அதற்கு அவன் "நான் உன்னைக் கடைசியாக சந்தித்த மறுதினமே, உன்னுடைய எண்ணம் போல் தாய் நாட்டிற்கு என்னாலான பணியைச் செய்ய வேண்டும் என்ற முடிவுடன், விமான மோட்டி (பைலட்) ஆக ராணுவத்தில் அமர்ந்து பயிற்சி பெற்று வந்தேன். நேற்று தான் எங்களுக்கு ஒரு அவசரத் தந்தி வந்து இங்கு வந்தோம். எதிரியின் விமானங்களை முறி அடித்தோம். அதில் எனக்கும், மற்றும் சிலருக்கும் காயம்பட்டு இவ்வாஸ்பத்திரிக்கு கொண்டு வரப் பட்டோம். உன்னையும் சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இந்த ராணுவ உத்தியோகமே தனி மதிப்புள்ளது என்று நினைக்கிறேன். நாமிருவரும் ராணுவத்தில் சேர்ந்ததைப் போல், நம் தாய் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணுமாக யுத்த சேவை செய்தால் எதிரியை எவ்வளவு சீக்கிரத்தில் முறி அடிக்கலாம். சீக்கிரத்திலும் வெற்றி காணலாமில்லையா ? கமலா !"

"ஆம் ! கட்டாயம் காணலாம். ஒவ்வொருவரும் இந்த யுத்தம் தனக்குத் தான் நேரிட்டது என்று கருதுவாரேயானால், அவரவர்கள் வேலையை அவரவர்கள் கட்டாயம் செய்து வெற்றி காணுவார்கள் நம் தாய் நாட்டிற்கு". என்றாள்.

"அவர்களும் நம் தாய் நாட்டிற்கு வெற்றியைக் காட்டத் தான் போகிறார்கள். நாமும் உடனிருந்து வேலை செய்து பார்க்கத்தான் போகிறோம்" என்றான் குமரேசன்.

இதற்குள் மணி ஆறாகி விட்டது. இடத்தை விட்டு இருவரும் எழுந்தார்கள்.

# யுத்த நாட் குறிப்புக்கள்

## பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஏப்ரல் 12.—யுத்தம் ஆரம்பமானதிலிருந்து இது வரை இங்கிலாந்தில விமானத் தாக்குதலின் பயனாக 49,876 பேர்கள் மரணமடைந்தார்கள்; 64,000 பேர்கள் காயப்பட்டார்கள்.

ஏப்ரல் 16.—ஐரோப்பாவிலுள்ள எதிரியைக் கடைசி முறையாகத் தாக்கி ஒழித்து விட வேண்டி, கைத்தொழில் ஒழுக்கம் மக்களிடையே அமைய வேண்டியது அவசியமென்று வற்புறுத்தி பிரிட்டிஷ் விமான உற்பத்தி மந்திரி சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வேண்டிக் கொண்டார்.

ஏப்ரல் 17.—யுத்த ஆரம்பத்தில், ஜெர்மனியில் 50 லட்சம் போர் வீரர்களிருந்ததாகவும், இப்போது 7,334,000 பேர்கள் இருப்பதாகவும், இவர்களில் 55 லட்சம் பேர்கள் முன்னணிப் படைகளென்றும், சமீபத்தில் கிடைத்த அறிக்கைகளிலிருந்து வெளியாகிறது.

## அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஏப்ரல் 12.—அடுத்த ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் ஒரு வருஷ காலத்திற்கு, கப்பற் படைச் செலவுகளுக்கென்று 32,64,70,00,000 டாலர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு முக்கியமான வேலையாக, அமெரிக்க உப தலைவர் மிஸ்டர் ஹென்றி வாலஸை சீனவுக்கு அனுப்புவதென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் முடிவு செய்திருக்கிருர்.

ஏப்ரல் 13.—இதுவரை அமெரிக்கப் படையினரில், கொல் ப்பட்டவரும், காயப்பட்டவரும், காணுமற் போனவரும், கைதியானவரும் சேர்ந்து 134,632 பேர்கள் நஷ்டம் என்று அமெரிக்க யுத்த மந்திரி தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு விரோதமாக, பிரிட்டனும் அமெரிக்காவும் ஹிட்லருடன் சேர்ந்து கொள்ள வேண்டு மென்று செய்யப்பட்டு வரும் பிரசாரம், மிகவும் கேவலமானதென்று மிஸ்டர் கார்டெல் ஹல் கண்டித்தார்.

ஏப்ரல் 14.—கப்பற் படைச் செலவுகளுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட தொகையை பிரதிநிதிகள் சபை அங்கீகரித்து நிறைவேற்றியது.

ஏப்ரல் 15.—சீனவிற்குத் தான் போகும் வழியில், மிஸ்டர் ஹென்றி வாலஸ், மிஸ்டர் சர்ச்சிலேயும் மார்ஷல் ஸ்டாலினேயும் கலந்து பேசிய பிறகு, சொல்லுவாரென்று தெரிகிறது.

## இந்தியா, பர்மா, இலங்கை.

ஏப்ரல் 12.—இம்பாலுக்கு வடக்கிலிருந்து வட கிழக்கே 12 மைல் வட்டாரத்திற்கு மிக்க கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

யுத்த மந்திராலோசனை சபையில் இந்தியப் பிரதிநிதிகளுள் ஒருவரான காஷ்மீர் மகாராஜா லண்டன் போய்ச் சேர்ந்து விட்டார்.

ஏப்ரல் 13.—இம்பால் சமவெளியில் ஓரிடத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. மோகாங் பள்ளத் தாக்கில் சீனர்கள் தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டிருக்கிருர்கள்.

தென்கிழக்காசியப் படைத் தலைமையைச் சேர்ந்த உத்தியோகத் தலைவர் அஸ்ஸாம்-பர்மா போர்முனை பற்றி ஒரு ஒலி பெருக்குப் பிரசங்கம் செய்தார்.

மணிப்பூர் சமஸ்தானத்திற்குள் ஜப்பானியப் படைகள் நுழைந்ததைக் குறித்து அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்றி எல். ஸ்டிம்ஸன் ஒரு அறிக்கை விடுத்தார்.

இம்பால் போர் முனைக்கு லார்டு லூயி மௌண்ட் பேட்டன் விஜயம் செய்ததாகத் தெரிகிறது.

ஏப்ரல் 16.—இம்பால் சமவெளிக்கு வட கிழக்கேயுள்ள ஒரு மலை ஸ்தானத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

தென் கிழக்காசிய நேச நாட்டு மகா படைத் தலைவர் அட்மிரல் லார்ட் லூயி மௌண்ட் பேட்டன் தன் காரியாலயத்தை புது டில்லியிலிருந்து இலங்கைக்கு மாற்றிக் கொண்டார்.

ஏப்ரல் 17.—இம்பால் சமவெளிக்கு வடகிழக்கே நேச நாட்டுப் படைகளின் கை ஓங்கியிருக்கிறது. கொஹிமா-தினப்பூர் ரோட்டில், ஜப்பானியரிடமிருந்த முக்கியமான இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

தேசீயப் பாதுகாப்புக் கௌன்சில் 14-வது கூட்டம் மேன்மை தங்கிய வைசிராய் பிரபு தலைமையில் நடைபெற்றது.

## ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஏப்ரல் 12.—சாம்-கொலோடெசே, அக்மனே, மரச்சாகங்கில், பால்லிஸெனி, கிரிகரியோபோல், டிரெஸ்போல் முதலிய நூற்றுக் கணக்கான இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றினர்கள்.

சோவியத் சமரச நிபந்தனைகளை பின்லாந்து பார்லிமெண்ட் சபை நிராகரிக்கும் என்று தெரிகிறது.

ஏப்ரல் 13.—கிரிமியாவின் தலை நகரையும், ஸ்மிபெரபோல் பியடோஷியா, யூபடோரியா, ஓவிடியபோல்—ஆகிய ஊர்களை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ரல் 14.—டார்னபோல், பச்சிசேரியா, அலுஷ்டா, ஆல்மா, சுடக், அக்மிச்செட், கரசுபேயர், சக்கி, சுயா முதலிய நூற்றுக் கணக்கான இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ரல் 15.—ஜெனரல் நிக்கலோய் பெடரோவிச் வாடுடின் காலமானர்.

அல்பட் உள்ளிட 60 இடங்களுக்கதிகமாகவே கிரிமியாவில் ரஷ்யர்கள் வசமாயின.

ஏப்ரல் 16.—யால்டா, அலுப்கா, லிவேடியா, முதலிய இடங்களை செம்படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ரல் 17.—செபஸ்டபோலில் இரண்டாம் நாள் யுத்தம் நடைபெறுகிறது.

## இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஏப்ரல் 12.—ரோமாபுரி பிடிபட்டவுடனே தன் பதவியினின்று விலகிக் கொள்ளுவதாக இத்தாலிய மன்னர் விக்டர் இம்மானுவல் முடிவு செய்திருக்கிருர்.

## விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஏப்ரல் 12.—பிரஞ்சுப் பாதுகாப்புப் படையின் உத்தியோகத் தலைவராக ஜெனரல் எமிலி மேரி பெதிவார்ட் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

ஏப்ரல் 15.—பிரஞ்சுப் படைகள் ஒன்றுபட்டிருக்கவேண்டிய அவசியத்தைக் குறித்து ஜெனரல் ஜிராட் ஒரு பிரசங்கம் செய்தார்.

## நடுநிலைமை நாடுகள்.

ஏப்ரல் 13.—நடு நிலைமை நாடுகள் அச்சு நாடுகளுக்கு சப்ளைகள் அனுப்புவது சம்பந்தமாக நேச நாடுகள் கலந்து பேசிக் கொண்டிருக்கின்றன வென்று மிஸ்டர் கார்டெல் ஹல் குறிப்பிட்டார்.

சில இயந்திரப் பகுதிகளை ஸ்வீடனிலிருந்து ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்வதை ஆட்சேபித்து இங்கிலாந்து அரசாங்கமும் அமெரிக்க அரசாங்கமும் சேர்ந்து ஸ்வீடன் அன்னிய நாட்டுக் காரியாலயத்திற்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றன.

ஒரு ஜெர்மன் வியாபாரக் கோஷ்டி லிஸ்பனுக்கு வந்திருக்கிறது.

ஏப்ரல் 14.—ஜெர்மனிக்கு ஸ்வீடன் சில இயந்திரப் பகுதிகள் சப்ளை செய்வது பற்றி இங்கிலாந்து அமெரிக்க அரசாங்கங்கள் ஸ்வீடனுக்கு அனுப்பிய கடிதத்தைப் பற்றி, ஸ்வீடிஷ் பார்லிமெண்டு ஆலோசிக்குமென்று ஸ்வீடிஷ் அந்நிய நாட்டு மந்திரி மிஸ்டர் குந்தர் கூறினர்.

## தூரக்கிழக்கு நாடுகள்.

ஏப்ரல் 12.—ஜப்பானிய சாம்ராஜ்யத்தை அடியோடு நாசஞ் செய்ய வேண்டு மென்று அமெரிக்க கப்பற்படைப் பிரதம தளபதி குறிப்பிட்டார்.

ஏப்ரல் 13.—தென்மேற்கு பஸிபிக்கிலும் மத்திய பஸிபிக்கிலும் மட்டும் 26,000 ஜப்பானியப் பிணங்களைக் கணக்கிட்டதாக, அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்ஸன் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 15.—நியூகினியைச் சேர்ந்த போகட்ஜிம் என்னுமிடத்தை ஆஸ்திரேலியப் படைகள் கைப்பற்றி மடாங்கை நோக்கி முன்னேறுகின்றன.

ஏப்ரல் 16.—சென்ற 6 வாரங்களுக்குள் அட்மிரல்டி தீவுகளில் மட்டும் 3,000 ஜப்பானியப் பிணங்கள் விழுந்ததாகக் கணக்கிட்டிருக்கிருர்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.